பக்கங்கள் : பதின்னான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 06 வியாழக்கிழமை (19.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :53

# தமிழ் எம்.பிக்களின் ஆர்ப்பாட்டத்தினால்

# நேற்றும் நாடாளுமன்ற அமர்வு குழம்பியது

## சபை அமர்வு இன்றுவரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 19

**மறைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையைக் கண்டித்தும், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் படையினரால் கொல்லப்படுவது மற்றும் தமிழர்களுக்கு எதிரான படை அடாவடித்தனங்களைக் கண்டித்தும் தமிழ் எம்.பிக்கள் நேற்றும் இரண்டாவது நாளாக நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்து சபை நடவடிக்கைகளை நடக்கவிடாது தடுத்தனர். இதனால் சபை அமர்வு முடக்கப்பட்டது.**

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தால் நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது போல், நேற்றைய ஆர்ப்பாட்டத்தாலும் நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிவரை சபாநாயகரால் ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு சபாநாயகர் பெரும் முயற்சி செய்தார். தமிழ் எம்.பிக்கள் உருவாக்கிய களேபரம் மற்றும் கூச்சல், குழப்பங்களால் சபாநாயகரின் முயற்சி தோல்வி

(14ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் கிரனேட் வீச்சுகள்

தென்மராட்சி, ஜன.19

சாவகச்சேரி மருத்துவமனையருகே நேற்றுக்காலை 9.30 மணிக்கு இனந்தெரியாதவர்கள் வீசிய கிரனேட் வெடித்ததில் படையினர் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்த பொதுமகன் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்றுச் சென்றார்.

இதேவேளை, கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கைக்குண்டுத்தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-6-117)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை நேற்றிரவு ஜனாதிபதி அழைத்துப் பேச்சு

### நாடாளுமன்றைக் குழப்பும் போராட்டத்தைக் கைவிடக் கோரிக்கை

கொழும்பு, ஜன.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்களை அழைத்து நேற்றுமாலை சுமார் ஒன்றரை மணி நேரம் அவர்களுடன் பேச்சு நடத்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவர்கள் மேற்கொள்ளும் நாடாளுமன்றக் குழப்பத்தைக் கைவிடுமாறு அவர்களிடம் கோரினார். ஆனால், அதனைக் கைவிடுவதற்கான இணக்கத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவிக்கவில்லை. நேற்றிரவு 8 மணி முதல் இந்தப் பேச்சுக்கள் அலரிமாளிகையில் இடம்பெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம், என். ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் உடனிருந்தனர்.

நாடாளுமன்றக் குழப்பத்தைக் கைவிட்டு, இன்று (வியாழனன்று) அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தின்போது, தங்களின் பிரச்சினைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விலாவாரியாகக் குறிப்பிட்டால், அவை தொடர்பான உரிய நடவடிக்கைகளைத் தாம் எடுப்பார் என இச்சந்திப்பின்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் திருத்தச் சட்டம் விவாதமின்றி நிறைவேறியதாம்

### கூச்சல், குழப்பத்துக்கு மத்தியில் சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 19

வடக்கு - கிழக்கிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு வழிசெய்யும் உள்ளூராட்சி சபைத் திருத்தச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதம், வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்துக்குள் நேற்றைய தினமும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயில் பேசுவது குறித்து இன்று தெற்கின் கருத்தைப் பெறுவார் மஹிந்த

கொழும்பு, ஜன.19

விடுதலைப் புலிகளுடனான முதலாவது சுற்று அமைதிப் பேச்சுக்களை நோர்வேயில் நடத்துவது குறித்து தென்னிலங்கைக் கட்சிகளின் கருத்தை, இன்று தாம் கூட்டியுள்ள அனைத்துக் கட்சி மாநாட்டின் மூலம் பெறுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஆனாலும், அதேநேரம் இந்தப் பேச்சுகளை நோர்வேயிலாவது நடத்தி முடித்து அமைதி முயற்சிகளை எப்படியாயினும் முன்நகர்த்துவது என்ற திட்டவட்டமான ஒரு தீர்மானத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே வந்துவிட்டார் என வேறு சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

நோர்வேயில் பேச்சுக்களை நடத்துவதற்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் தாக்கியதில் மீனவர்கள் ஆறுபேர் படுகாயம்!

### காரைநகர் கடலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.19

காரைநகர் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கடற்றொழிலாளர்கள் ஆறுபேர் கடற்படையினரால் தாக்கப்பட்டனர். அவர்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

காரைநகரைச் சேர்ந்தவர்களான வேலுப்பிள்ளை இராசரத்தினம் (வயது 54), சோமு உலகேஸ்வரமூர்த்தி (வயது 46), முருகேசு கந்தசாமி (வயது 40), (14ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிக் கூட்டம் இன்று மாலை தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பில்லை

கொழும்பு, ஜன.19

அமைதிப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான கருத்தொருமைப்பாட்டைப் பெறும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறவுள்ள அதேவேளை, இந்தக் கூட்டத்திற்கு முக்கியமான தமிழ்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையெனத் தெரிய வருகிறது.

இன்று மாலை ஐந்து மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த சர்வகட்சிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்திற்கு அனைத்துக் கட்சிகளும் அழைக்கப்படுமென்று ஜனாதிபதியுடன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகருக்குத் தனி பிரதேசசபை

இதுவரை ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் கீழ் இயங்கி வந்த காரைநகர் இப்போது தனியான பிரதேசசபையாக உருவாகியிருக்கிறது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச சபையின் வடக்கு, தெற்கு, மேற்கு நிர்வாக எல்லைகளாக இந்துசமுத்திரமே இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காரைநகர் மேற்கு, காரைநகர் வடமேற்கு, காரைநகர் கிழக்கு, காரைநகர் தென்கிழக்கு, காரைநகர் தெற்கு, காரைநகர் தென்மேற்கு, காரைநகர் வடக்கு, காரைநகர் வடகிழக்கு, காரைநகர் மத்தி ஆகிய ஒன்பது கிராமசேவையாளர் பிரிவுகள் இந்தப் புதிய பிரதேச சபைக்குள் அமைகின்றன. (க)

## திருமலை மாணவர் ஐவரினதும் மரணம் கொலை எனத் தீர்ப்பு

திருகோணமலை, ஜன.19

திருகோணமலை கடற்கரையில் கடந்த இரண்டாம் திகதி முன்னிரவு ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்கள் மரணமான சம்பவம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.


கொலையாளிகளைக் கைதுசெய்து நீதியின் முன்நிறுத்த நீதிவான் பி.இராமக்கமலன் உத்தரவு வழங்கியிருக்கின்றார்.

இது தொடர்பான மரண விசாரணைகள் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்ற நிலையிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்தவர்களான சோமு உலகேஸ்வரன், வேலுப்பிள்ளை இராசரத்தினம் ஆகியோரை முறையே முதலிரு படங்களிலும் அடிகாயங்களுக்கு உள்ளாகிய நான்குபேரையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: ரியன்)

# தங்கள் படகில் எம்மைத் தூக்கிப்போட்டு இரும்புக் கம்பிகளால் கடற்படையினர் தாக்கினர்!

## காரைநகர் கடலில் காயமடைந்த மீனவர்கள் விவரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

"நாங்கள் சாகின்றோம் நீங்கள் புலிகளுக்கு உதவுகின்றீர்களா" என்று கேட்டுக் கேட்டு கடற்படையினர் எங்களைத் கடுமையாகத் தாக்கினர். இரும்பு 'பைப்பு'க்களால் தாக்கப் பட்டதில் எங்கள் கைகள் முறிந்தன.

- இவ்வாறு தமக்கு நேர்ந்த திகில் அனுபவத்தை விவரித்தனர் மீனவர்கள்.

காரைநகர் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்து சமயம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்ட மீனவர்கள் இந்தச் சம்பவம் குறித்து 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

வழமைபோல் கரையோரம் காவலரண் பகுதியிலிருக்கும் கடற்படையினரிடம் அனுமதிபெற்றுக்கொண்டு நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு கடலில் இறங்கினோம். 6 பேரும் 3 படகுகளில் சென்றோம். நாங்கள் வழமையாக மீன்பிடிக்கும் பகுதியில் நங்கூரமிட்டு வலைகளை விரித்தோம். கடற்படையினரின் உத்தரவிற்கமைய படகுகளில் 'இலாந்தர்' விளக்குகளைக் கொழுத்திவைத்திருந்தோம். வலை விரித்து முடிந்தபோது அதிகாலை ஒரு மணியளவில் எம்மைநோக்கி வந்த கடற்படையினரின் படகு எமக்கு சற்றுத்தூரத்தில் நிறுத்தப்பட்டது. அங்கிருந்து எமது படகை நோக்கி வெளிச்சத்தைப் பாய்ச்சிய பின்னர் அவர்கள் எம்மைநோக்கி வந்தனர்.

எம் அருகில் வந்து எமது படகை இடித்துச் சேதப்படுத்தினர்.

எம்மைத் தமது படகு ஒன்றில் ஏற்றி இரும்புக் குழாய்கள், கொட்டன்கள் என்பவற்றால் கண்டபடி தாக்கத் தொடங்கினர்.

'நாங்கள் சாகிறம்; நீங்கள் புலிகளுக்கு உதவுகிறீர்களா?' எனக் கேட்டுக் கேட்டுத் தாக்கினர். கடற்படையினரின் தாக்குதலால் சோமு உலகேஸ்வரனின் இரு கைகளும் முறிந்தன. வேலுப்பிள்ளை இராசரத்தினத்தின் கை, கால் என்பனவும் முறிந்தன. எனினும், கடற்படையினர் எம்மை விடாது தாக்கினர். நீண்ட நேரத்தின் பின்னரே எமது படகினுள் இறக்கி விடப்பட்டோம். இரத்தம் பீறிட வலியால் முனகியபடி படகினுள்ளே கிடந்தோம். எமது வலைகளும் அறுத்தெறியப்பட்டன. பின்னர் கடற்படையினர் எம்மை அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். சுமார் அரை மணிநேரம் எம்மீது தாக்குதல் தொடுத்தனர். ஐந்து மணி நேரம் அப்படியே முனகிக்கொண்டு படகினுள்ளேயே கிடந்தோம். பின்னர் ஒருவாறு படகினை இயக்கி கரைசேர்ந்தோம். பின்னர் கரையில் நின்றவர்களின் உதவியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டோம் -

இவ்வாறு மீனவர்கள் தெரிவித்தனர்.

(ஐ-12-14-15)

# இடம்பெயர்ந்த சுகாதாரப் பணியாளருக்கு

கிளிநொச்சி,ஜன.19

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள சுகாதாரப் பணியாளர்களின் விவரங்களைத் திரட்டும் முயற்சியில் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகம் ஈடுபட்டுள்ளது.

எனவே, வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள சுகாதார உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தொண்டர்கள் அனைவரும் தமது விவரங்களை அருகில் உள்ள தமிழீழ சுகாதார சேவைகளின் ஏதாவது ஒரு பணிமனையில் பதிவுசெய்யுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

# தமிழ் மக்கள் உயிரச்சம் தவிர்த்துக்கொள்ள பாதுகாப்பான பிரதேசத்தை நாடவேண்டும்!

## யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.19

தமிழ் மக்களின் உயிரச்சம் தவிர்க்க பாதுகாப்பான பிரதேசத்தை நாடும்படி யாழ். மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில வாரங்களாக ஸ்ரீலங்கா படைகளும், துணைக் குழுக்களும் மக்களைக் கொன்று குவிக்கும் பாதகங்களை அரசின் ஆசீர்வாதத்துடன் அரங்கேற்றுகின்றன.

அப்பாவிகள் நாம் ஏதும் அறியோம் எனக் கதறியும் ஆண்கள், பெண்கள், சிறியவர்கள், முதியவர்கள் என்ற வேறுபாடின்றி வீதிகளிலே தாக்கப்படுகின்றனர். பெண்கள் உடற்சோதனை என்ற பெயரில் அவமானப்படுகின்றனர், படுகாயம் அடைந்தவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்படாது தடுக்கப்படுகின்றனர், இரவிலும் தேடுதல் என்ற பெயரில் வேலிபிரித்து நடுவீட்டில் அட்டகாசம் செய்கின்றனர், துணைக்குழுக்கள் நடுநிசியில் வீடு புகுந்து கொள்ளையடிக்கின்றனர். எவ்வகை பாதுகாப்புமற்ற வாழ்க்கை என்ற துயரம் மிக்க அவலமான சூழ்நிலையே படைகளால் யாழ். மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொல்வதாயின் யாழ்ப்பாணம் தமிழ் மக்களுக்கு திறந்தவெளி சிறையாகிவிட்டது.

ஸ்ரீலங்கா அரசாங்கமோ சமாதானப் போர்வையைப் போட்டுக்கொண்டு தமிழின அழிப்பினை மேற்கொள்வதற்காக - ஒரு போரினை தமிழ்மக்கள்மீது திணிப்பதற்காக - திட்டங்களைத் தீட்டி வேகமாக காய்களை நகர்த்துகிறது.

ஆகவே, உங்களது குடும்பங்களை காத்துக்கொள்வதற்காக சிவில் நிர்வாகம் குலைந்துள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து பாதுகாப்புத்தேடி இராணுவத்தின் தலையீடற்ற பிரதேசங்களுக்குச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

# நேற்று மட்டும் 340 குடும்பங்கள் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்வு

கிளிநொச்சி,ஜன.19

யாழ். குடாநாட்டின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வன்னிப் பகுதிக்கு நேற்றுமட்டும் 340 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று வன்னிக்கு இடம்பெயர்ந்த குடும்பங்களில் 50 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய குடும்பங்கள் பிரதேச மட்டங்களில் உள்ள நலன்பேணும் நிலையங்களில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களுக்கான சமைத்த உணவு உட்படப் பல்வேறு உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிவருவதாகக் கூறப்படுகின்றது. (8)

# சார்ஜன்டை சுட்டுக் கொன்றுவிட்டு பொலீஸ் கான்ஸ்டபிள் தற்கொலை

வவுனியா,ஜன.19

மதவாச்சி-மன்னார் வீதியில் நேற்று பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலீஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பொலீஸ் கான்ஸ்டபிள் தற்கொலை செய்துகொண்டார்.

14ஆவது செக்டர் பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட பொலீஸ்கான்ஸ்டபிளுக்கும் சார்ஜன்ட்டுக்கும் இடையே வாய்த்தகராறு இடம்பெற்றதாகவும் - அதனை அடுத்து சார்ஜன்ட்டை சுட்டுக் கொன்ற கான்ஸ்டபிள் அதே துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக் கொண்டார் என்றும் - கூறப்படுகிறது. (ஒ-164)

# மாவீரர் நினைவுக் கற்கள் திரைநீக்கம்

கிளிநொச்சி,ஜன.19

வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களதும் நாட்டுப்பற்றாளரினதும் வீரவணக்கக் கூட்டமும் நினைவுக் கற்கள் திரைநீக்கமும் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றன.

பளை மத்திய கல்லூரியில் தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன் ஏற்றினார்.

தொடர்ந்து நாட்டுப்பற்றாளர் வள்ளிப்பிள்ளை, லெப்.நகுலன்,வீரவேங்கை சச்சி, கப்டன் செவ்வந்தி, வீரவேங்கை பவுணன், லெப்.பவித்தரா ஆகிய மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கான ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

நினைவுரைகளை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், பளைப் பிரதேச வர்த்தக சங்கத்தலைவர் அமீர் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து திருவுருவப் படங்கள் கிளிநொச்சி மாவீரர் து... செல்லப்பட்டு நி... செய்யப்பட்டன. (ஒ-6)

# பாடசாலை ஆரம்பித்து 3 வாரங்கள் பாடநூல்கள் இன்னும் வழங்கவில்லை

தென்மராட்சி,ஜன.19

பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஆரம்பித்து மூன்று வாரங்களாகியும் மாணவர்களுக்குரிய இலவச பாடநூல்கள் இதுவரை வழங்கப்படாததால் பாடத்திட்டங்கள் ஆரம்பிக்க முடியவில்லை என ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

தரம் 8 வகுப்பில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் கற்கைநெறிகளை ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இவ் வகுப்பில் தெரிவுப் பாடங்களாக உள்ள தமிழ், கணிதம் போன்ற பாடங்களுக்குரிய புத்தகங்கள் கூட இன்னமும் வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் தரம் 7 வகுப்புகளில் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் தெரிவுப் பாடங்களான தமிழ், கணிதம் ஆகியவற்றுக்கான புத்தகங்கள் வராத நிலையில் கல்வியாண்டு நிறைவடைந்ததாகவும் -

தரம் 1,2 வகுப்புகளுக்கும் கடந்த வருடம் பாடப்புத்தகங்கள் வரவில்லையெனவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தரம் 8 வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டத்திற்குரிய கைநூல்கள் கிடைக்காததால் இவ்வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள் நடத்தப்பட்ட வேளையில் யாழ். கல்வி வலயத்திலிருந்து பாடப்புத்தகங்கள் பெற்று அவற்றினைப் புகைப்படப் பிரதி செய்து வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தரம் 8 வகுப்புகளில் புதிய பாடத்திட்டத்திற்கமைய புவியியல், வரலாறு குடியுரிமைக் கல்வி போன்ற பாடங்கள் அறிமுகப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

# கொடிகாமத்தில் புதிய பஸ் நிலையம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திறப்பு

சாவகச்சேரி,ஜன.19

கொடிகாமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய பஸ் நிலையம் மற்றும் இருமாடிக்கட்டடத் தொகுதி ஆகியவை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளன. கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் சாவகச்சேரிப் பிரதேச சபையால் புதிய பஸ் நிலையமும், இருமாடிக் கட்டடத் தொகுதியும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திறப்புவிழா நிகழ்வு சாவகச்சேரிப் பிரதேச சபைச் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் யாழ். அரச அதிபர் க.கணேஸ் பிரதம விருந்தினராகவும் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், உள்ளூராட்சி சுனாமிப் பகுதி உதவி ஆணையாளர் க.இராசையா, வட பிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் எஸ்.கணேசபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இக் கட்டடத்தொகுதி சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-31-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# உரிமைக்காக உறுதியுடன் குரல் எழுப்பும் தலைவர்கள்

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு கிளப்பிய எதிர்ப்பால் நாடாளுமன்றம் நேற்று இரண்டாவது நாளாக அதன் அமர்வை நடத்தமுடியாமல் ஒத்திவைத்திருக்கின்றது.

இன்று அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறவேண்டும். அதனால், இன்னும் அங்கு சூடு பறக்கும் என எதிர்பார்க்கலாம்.

இந்த விவகாரம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கும் கருத்துகள் நோக்கற்பாலானவை.

நாட்டில், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு வக்கில்லாத -

தமிழர்கள் மீது அரச படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களைத் தடுத்து நிறுத்த இயலாத -

தமிழர்கள் அரச படையினரால் படுகொலை செய்யப்படுவது தொடர்பாகவும், கைதுசெய்யப்படுவது தொடர்பாகவும் விசாரணை செய்யாமல் கண்மூடித்தனமாக இருக்கின்ற -

இந்த அரசின் வலது கை போன்ற நாடாளுமன்றத்தை இயங்க அனுமதிக்கமாட்டோம். - என்று சூளுரைத்திருக்கிறார் இரா.சம்பந்தன்.

இது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய நான்கு கட்சிகளின் முடிவு மட்டுமல்ல. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகிய அனைத்துத் தமிழ்க் கட்சிகளினதும் தீர்மானமும் கூட. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தியாகராஜா மகேஸ்வரனும் இதில் சேர்ந்துகொண்டிருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள 35 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூவரைத் தவிர ஏனைய அனைவரும் இந்த விவகாரத்தில் இப்போது ஒன்றிணைந்திருக்கிறார்கள்; ஐக்கியப்பட்டிருக்கின்றனர்.

அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இ.தொ.காவிலிருந்து குத்துக்கரணம் அடித்து அரசுப்பக்கம் நிற்கின்ற பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஷ், ஜே.வி.பியின் சார்பில் ஒப்புக்கு ஒரு தமிழராக நியமிக்கப்பட்டிருக்கும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சந்திரசேகரன் ஆகியோர் தவிர மற்றெல்லாத் தமிழர்களும் தமிழ் இரத்தங்கள் என்ற முறையில் ஒன்றிணைந்திருக்கின்றனர்.

தென்னிலங்கைப் பெரும்பான்மை இனத்தவரின் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த தி.மகேஸ்வரன் எம்.பி. கூட, தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்குக் குரல் எழுப்புவதற்கு - அழைப்பு ஏதும் விடுக்கப்படாதபோதும் - கட்சி பேதம் துறந்து, தமிழ் எம்.பிக்களோடு உணர்வுபூர்வமாக இவ்விடயத்தில் ஒன்றிணைந்திருக்கின்றபோது -

இ.தொ.காவிலிருந்து 'பல்டி' அடித்து அதற்குப்பதிலாக பிரதி அமைச்சுப் பதவியைப்பெற்ற பின்னரும், தாம் இன்னும், இ.தொ.கா. உறுப்பினர் என்றும், அதிலிருந்து தன்னை யாரும் வெளியேற்றமுடியாது என்றும் தம்பட்டம் அடிக்கும் பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஷ் - அவர் தாம் கூறுவது போல் இன்னும் இ.தொ.கா. உறுப்பினராகத் தம்மைக் கருதுவாரானால் - ஏனைய இ.தொ.கா. உறுப்பினர்களுடன் சேர்ந்து தமிழர்களின் இந்தப் பொதுப் பிரச்சினையில் தனது பங்களிப்பையும் நாடாளுமன்றத்துக்குள் உரிய முறையில் வழங்கியிருக்கமுடியும். அப்படிச் செய்வதற்கு இன்னும் காலம் தாழ்ந்து விடவில்லை என்பதை அவருக்கு இங்கு நினைவுபடுத்தி சுட்டிக்காட்டுவது பொருத்தமானது.

எது, எப்படியோ நாட்டில் தமிழர்கள் என்பதற்காக, அவர்களைப் பாகுபடுத்தி, அவர்களுக்கு எதிராக இன ஒதுக்கல் போக்கு நடவடிக்கைகளை ஆயுததாரிகள் மூலம் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் அராஜகத்தை ஆட்சேபித்து தமிழர்களின் மிதவாதக்கட்சிகள் எல்லாம் ஐக்கியமாக - ஒன்றுபட்டு - ஓரணியில் நிற்கும் சூழ்நிலை, அதுவும் நாடாளுமன்றத்துக்குள் உணர்ச்சியோடு, வலுவாகத்திரண்டு நிற்கும் புதிய அரசியல் கலாசாரம் தமிழர் மத்தியில் உருவாகியிருக்கிறது.

தமிழர்களின் மிதவாத அரசியல் செயற்பாட்டில் இது ஓர் வரலாற்றுத் திருப்புமுனை.

ஜனநாயக நடைமுறைகளுக்கு வெளியில் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் வலுவும் வீறும் கொண்டு ஆர்ப்பரித்து நிற்பதுபோல -

ஜனநாயக நடைமுறைக்குள் தமிழ் மக்களை வழிகாட்டும் சக்திகளும் அதே வீறுடனும், வீறாப்புடனும், தைரியத்துடனும், உணர்வோடும் எழுந்து நிற்கும் புதிய வரலாற்றுப் பரிமாணத்தினை நாங்கள் தரிசிக்கும் சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது.

1977 பொதுத்தேர்தலில் ஈழத்தமிழர்களுக்கென சுதந்திர - சுயாதீன - தனித்தமிழீழம் ஒன்றை உருவாக்குவதற்கு தமிழ் மக்களிடம் ஆணை பெற்ற எமது மிதவாதத் தலைமைகள், அந்தத் திசையை நோக்கித் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டிய கடப்பாட்டை மறந்து, வரலாற்றுத் தவறிழைத்து, மக்களை வழிப்படுத்தும் தகுதியிழந்து, மக்களாலேயே ஓரம்கட்டப்பட்டார்கள்.

ஆனால், மூன்று தசாப்த காலத்தின் பின்னர் அந்த இடைவெளியை இட்டு நிரப்பவந்த நமது ஜனநாயக அரசியல் வழித்தலைவர்கள், நாம் முன்னையவர்கள் அல்லர், உரிமைக்காக உறுதியுடன் செயற்படும் உண்மைத் தலைவர்கள் என்பதை நிரூபிக்க முயல்கின்றார்கள்.

சிங்கத்தின் குகைக்குள் புலி உறுமல்போல நாடாளுமன்றத்துக்குள் அவர்கள் சீறியிருக்கிறார்கள்.

வெளியில் உறுமும் புலிகளை அடக்க முடியாதவர்கள் சபைக்குள் உறுமும் தமிழர்களை என்ன செய்யப்போகிறார்கள் என்பது இனித்தெரியவரும்.

# ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக் குறித்து ஜனாதிபதியுடன் பேச அமைப்புகள் முயற்சி

## நேரம் ஒதுக்குமாறு கேட்டு 5 அமைப்புகள் சார்பில் கடிதம்

கொழும்பு, ஜன.19

தமிழ் ஊடகவியலாளர்கள் அச்சமின்றி சுயாதீனமாகப் பணியாற்றுவதை உறுதிப் படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தென்னிலங்கை ஊடக அமைப்புகள் ஜனாதிபதியிடம் கோரி உள்ளன.

இது தொடர்பாக இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்,ஊடக ஊழியர் தொழிற் சங்க சம்மேளம் , சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளன.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பாதுகாப்புத் தரப்பினர் மூலம் அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி ஊடக வியலாளர்களை கைதுசெய்தல், இடையூறுகளை விளைவித்தல் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதனை அண்மைக்காலங்களில் காணக்கூடியதாக இருந்ததுடன் இவை அதிகளவில் தமிழ் ஊடகங்களை இலக்காக வைத்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றதனையும் காணக்கூடிதாயுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர்களை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யும் பொழுது மட்டுமன்றி கடமை நேரத்திலும் கூட பாதுகாப்புத் தரப்பினர் மூலம் அரசினால் வழங்கப்புடுள்ள உத்தியோகபூர்வ அடையாள அட்டையினையும் நிராகரித்துள்ளனர். இது ஊடகவியலாளர்களுக்கு தமது தொழிலை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு போன்று அவர்களின் பாதுகாப்புக்கும் தடையேற்பட்டுள்ளது. அதனால், இந்நிலைமை தொடர்பாக உங்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கு எமது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆர்வத்துடன் இருப்பதுடன் அதற்காக உடனடியாக தினமொன்றையும் நேரத்தினையும் பெற்றுத்தருவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

அவசரகாலச் சட்டம் ஊடகத்தடைக்கு எதிராக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களை நீங்கள் அறிந்துகொள்வதற்காக கீழே குறிப்பிட விரும்புகின்றோம்.

டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகும் 'ஈழநாடு' பத்திரிகை சோதனைக் குட்படுத்தப்பட்டது-

டிசெம்பர் 17 ஆம் திகதி கொழும்பில் பிரசுரமாகும்'தினக்குரல்' பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு 12 மணித்தியாலங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டமை. அவரது கைவிரல் அடையாளம் பெறப்பட்டமை மற்றும் புகைப்படம் எடுத்துக் கொண்டமை-

டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை செய்தி சேகரித்துக்கொண்டிருந்தோர் பாதுகாப்புத் தரப்பினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதுடன் அரசினால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையினையும் நிராகரித்துள்ளனர்.

ஜனவரி 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகும் 'தினக் குரல்' பத்திரிகை அலுவலகம் சோதனையிடப்பட்டது-

இதற்கு மேலதிகமாக ஜனவரி மாதம் முதலாம் திகதி அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர்களை புகைப்படம் எடுத்து பத்திரிகையில் பிரசுரித்த குற்றச்சாட்டின் பேரில் 'வீரகேசரி' மற்றும் 'தினக்குரல்' பத்திரிகையின் இரு படப்பிடிப்பாளர்கள் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# குண்டு வெடிப்பைக் கண்டு கண்காணிப்புக்குழு ஓடி விடாது!

கொழும்பு, ஜன.19

குண்டு வெடிப்பைக் கண்டு கிழக்கு மாகாணத்திலிருந்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஓடிவிடாது. அதன் அலுவலகம் மட்டக்களப்பில் நாளாந்தப் பணிகளுக்காகத் திறந்தே இருக்கும்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலாப்ஸ் டொட்டர்.

கடந்த வாரம் மட்டக்களப்பிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்ட அலுவலகம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதையொட்டி கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்:-

குண்டுத்தாக்குதல் இடம்பெற்றிருந்த போதிலும் எமது பணிகளை நாம் நிறுத்தப்போவதில்லை. மட்டக்களப்பு அலுவலகத்தில் எமது பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம். எமது மட்டக்களப்பு அலுவலகம் வழமை போல் திறந்தே இருக்கும் என்றார் அவர்.

### பாதுகாப்பை உறுதி செய்க

இதேவேளை -

கடந்த வாரம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புப் குழுவின் அலுவலகத்தில் குண்டொன்று வெடிக்க வைக்கப்பட்டதைக் கண்டித்து நோர்வே வெளியுறவு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையிலுள்ள கண்காணிப்புக் குழு பாரபட்சமற்ற சிவிலியன்களைக் கொண்ட குழுவாகும். இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்தத்தை கண்காணிக்கும் பொருட்டு இரு தரப்பும் விடுத்த கோரிக்கையின் பேரில் அது செயல்ப் படுத்தப்படுகின்றது. இக்குழுவின் செயற்பாடுகளுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பில் எப்போதுமே நம்பிக்கை நிலவி வருகின்றது. அதேபோல் ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள இருதரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகளுக்கு இருதரப்பினரும் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புப் குழுவில் இடம்பெற்றுள்ள டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகியவற்றின் சார்பில் இக்கண்டண அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

# ஸ்ரான்லி கல்லூரி பவள விழா

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பவளவிழா எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், திருமதி பரமேஸ்வரி கணேஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-12)

# பிரசவத்தின்போது பெண் மரணம்: வவுனியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

## அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டாக்டர்களும் வெளிநடப்பு

வவுனியா,ஜன.19

வவுனியாப் பொது மருத்துவமனையின் முன்பாக நேற்று இரண்டு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

கடந்த 7ஆம் திகதி மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்டு இருந்த திருமதி ரூபகாந்தன் கலைவாணி என்ற பெண் பிரசவத்தின்போது மரணமாகியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியர்களின் அசமந்தப் போக்குக் காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இனிமேல் வவுனியாப் பொது மருத்துவமனையில் இவ்வாறான சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தினை ஏற்பாடு செய்தோம் - என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சுகாதார அமைச்சருக்கான மகஜர் வவுனியா மேலதிக அரச அதிபர் திருமதி சார்ஸ்லிடம் கையளிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட மகப்பேற்று வைத்தியரை உடன் இடம்மாற்றுமாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியசாலை வைத்தியர்களும் ஊழியர்களும் மற்றொரு ஆர்ப்பாட்டதில் குதித்தனர்.

வைத்தியரின் அசமந்தம் காரணமாக உயிரிழப்பு ஏற்படவில்லை என்றும் குறிப்பிட்ட பெண்ணைக் காப்பாற்றுவதற்காக வைத்தியர்கள் மிகவும் பிரயத்தனம் எடுத்தனர் என்றும் - வைத்தியர்கள் தெரிவித்தனர்.

வைத்தியர்கள் மீது அவதூறு ஏற்படுத்துவதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தினை மக்கள் திட்டமிட்டு மேற்கொண்டனர் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வைத்தியர்களும் ஊழியர்களும் தெரிவித்தனர்.

பிரசவத்தின்போது உயிரிழந்த பெண்ணுக்கு Amniotic Fluid embdism என்ற நோய் இருந்தது. அந்த நோய் காரணமாகவே அவர் உயிரிழந்தார். இந்த நோய் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட பெண்ணின் மரணம் 95வீதம் உறுதி என்றும் மருத்துவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பொது மருத்துமனையில் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் இவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றதாகவும் அதன்பிறகு தற்போது இ[illegible] சம்பவம் நடந்துள்ளது என்றும் [illegible]வைத்தியர்கள் தெரிவித்தனர். (ஐ-7-164)

# வவுனியாவில் கிளைமோருடன் இளைஞன் கைது!

வவுனியா,ஜன.19

வவுனியா நகரில் இருந்து நான்கு கிலோமீற்றர் தெற்கு திசையாகவுள்ள நவகம என்ற இடத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் நேற்றுப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

பஸ் ஒன்றில் வந்த இவர் நவகம என்ற இடத்தில் இறங்கியவேளை சந்தேகத்தின் பேரில் படையினர் குறிப்பிட்ட நபரை சோதனையிட்டனர் என்றும் -

இதன்போது அவர் எடுத்து வந்த கைக் கூடை ஒன்றினுள் கிளைமோர்க் குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அடுத்து அவர் கைதுசெய்யப்பட்டார் என்றும் - படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

இவரை நேற்று மாலை வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-164)

### உதாவாக்கு

உடல் நோய்க்கு பல மருந்துகள் உண்டு. உள்ள நோய்க்கு தன்னலமற்ற சேவையே மருந்து

-சத்தியசாயி பாபா

### நாளை

தை 7
வெள்ளிக்கிழமை
20.01.2006
திதி: ஷஷ்டி
பின்னிரவு: 3.14 வரை
நட்சத்திரம் : உத்தரம்
முற்பகல் : 10.16 வரை
சுபநேரம் : 06.35 - 08.05
ராகுகாலம் :11.05 - 12.35
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த தினமும் இறந்த தினமும் நினைவு நாள்





அமரர்
**விஸ்வநாதர் சின்னையா**
(இளைப்பாறிய
உதவி வைத்தியர், நிலப்பிரபு)
[குழுவான், மலேசியா]

திருமதி
**சின்னையா வள்ளியம்மை**
[குழுவான், மலேசியா]

| | | |
|---|---|---|
| 19.01.1896 | மலர்வு | 01.09.1910 |
| 13.12.1975 | உதிர்வு | 30.01.1942 |

*வருடங்கள் பல ஓடினாலும் மனதில்*
*விழுந்த தாக்கம் மறைவதில்லை!*

பாணாவெட்டி, தொல்புரம். (45783)(21.15.45) **அன்பு மகள்**

## விண்ணக வாழ்வில் 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

*மண்ணில்*
*12 . 10 . 1926*



*விண்ணில்*
*19 . 01 . 1999*

அமரர் **சுவாம்பிள்ளை அருளானந்தம்**

*உங்கள் ஆன்மா இறைவனின்*
*சந்நிதியில் இளைப்பாற இறைவனை*
*வேண்டிநிற்கின்றோம் - உங்கள்*
*நீங்கா நினைவுகளுடன் வாழும்.....*

இல.8, ஆக்லேன்,
உடுவில்.
(45776) (39)

*அன்பு மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
*உற்றார், உறவினர், நண்பர்கள்.*

## பிரசீடியத்தின் 2ஆம் வருட விழா

ஊர்காவற்றுறை புனித மரியாயின் சேனை பரலோக இராக்கினி பிரசீடியத்தின் இரண்டாம் வருட நிறைவுவிழா எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறைப் பங்குத் தந்தை அருட்திரு. ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-51)

## பனங்கள் விற்பனை

ஊர்காவற்றுறைப் பகுதியில் பனங்கள் சீசன் ஆரம்பித்துள்ளது. ஊர்காவற்றுறை கடற்கரை வீதி, முதலாம் இலக்க கள்ளுத் தவற ணையில் ஒரு போத்தல் பனங்கள் 30 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக இங்கு க்ள் அருந்தும் வாடிக்கையாளர் தெரிவித்தனர்.

(ஐ-51)

## பிற்போடப்பட்டுள்ளது HND, MBA

25.01.2006 அன்று ஆரம்பிக்கப்பட இருந்த **HND** கற்கைநெறியும் 21.01.2006 அன்று ஆரம்பிக்கப்பட இருந்த **MBA** கற்கைநெறியும் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் நலன்கருதி மாசி மாத நடுப் பகுதிக்கு பிற்போடப் பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

மேற்படி கற்கை நெறிகளுக்கு பதிவினை மேற்கொண்ட அனைத்து மாணவர்களுக்குமான அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன

மேலதிக விபரங்களுக்கு
அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்

இயக்குநர்
IIS CITY CAMPUS
யாழ்ப்பாணம்
☎ 021 222 8060

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்
### யாழ்ப்பாணம்

யாழ். இந்து பழைய மாணவர் சங்க செயற்குழுவினர் பழைய மாணவர் சங்க நூற்றாண்டு மலர் வெளியீட்டன்று 75 வயதுக்கு மேற்பட்ட பழைய மாணவர்கள் / கற்பித்த ஆசிரியர்களைக் கௌரவிக்கவேண்டும் எனத் தீர்மானித்துள்ளனர். இதற்கிணங்க பின்வரும் விவரங்களை 10.02.2006ஆம் திகதிக்கு முன்னர் தந்துதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். இவ்விளம்பரத்தைப் பார்வையிடுபவர்கள் பழைய மாணவர்களை அறிந்திருப்பின் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

முழுப்பெயர், விலாசம், பிறந்ததிகதியும் வயதும், கற்ற/கற்பித்த காலம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றினை **தலைவர், பழைய மாணவர் சங்கம் யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப் பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

E.mail: kparamunhab @ slt net.lk
principal @ jaffnahindu.org
Telephone No. 021 - 222 3900
021 - 222 2431

பழைய மாணவர் சங்கம்,
க.பரமேஸ்வரன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
தலைவர் (21.45.15)(சி-47410) யாழ்ப்பாணம்.

## விற்பனைப் பிரதிநிதி தேவை

எமது ஸ்தாபனத்துக்கு முன் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி (ஆண்) உடன் தேவை. நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். முடிவுதிகதி 24.01.2006

**S.M.S WORLD PVT**
இல.291, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0777 & 915824, 0773 & 276339

(45770) (21.15.45)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகநாதன் பாலசுப்பிரமணியம்



*(சட்டத்தரணி, இளைப்பாறிய பணிப்பாளர், இளைப்பாற்றுத் திணைக்களம், பணிப்பாளர் - சமூகசேவை திணைக்களம், பொதுமுகாமையாளர் - காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கொழும்பு, முன்னாள் செயலாளர், தர்மர்த்தாசபை ஸ்ரீநாக பூசணி அம்பாள் தேவஸ்தானம், சீரணி, சண்டிலிப்பாய்)*

காரைநகர் நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும் டச்சுவீதி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகநாதன் பாலசுப்பிரமணியம் 17.01.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகநாதன் - அன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும் சுந்தரம்பிள்ளை - வடிவாம்பிகை தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கணேசவதியின் தந்தையும் நற்குணசீலனின் மாமனாரும் வராகி, வராகன் ஆகியோரின் பேரனும் நடராசா (ஆஸ்திரேலியா), கந்தசாமி (அமரர்) மற்றும் கனகாம்பிகை (வவுனியா), ஞானாம்பிகை (அமரர்), மற்றும் குமாரசாமி (லண்டன்), அகிலாம்பிகை (கனடா), மகாதேவன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் கணேஸ்வரி (லண்டன்), பரஞ்சோதி (லண்டன்), மயில்வாகனம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2006) வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சுவீதி,*
*சண்டிலிப்பாய்.* (45767) (32.21.15.45)
தகவல்:
**மகேஸ்வரி** (மனைவி).

### திருமதி சின்னையா சித்திரம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும்கொண்ட திருமதி சின்னையாசித்திரம் 17.01.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு- தங்கம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- ஆச்சிக்குட்டி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் மனைவியும் கமலசித்திராவதி (ஜேர்மனி), விமல சித்திராவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற கலாநாதன் மற்றும் கமலநாதன் (வேவி- பிரான்ஸ்), விமலநாதன் (கனி- கனடா), சாந்த சித்திரா (லண்டன்), ஆத்மநாதன் (மன்னன்- லண்டன்) ஆகியோரின் தாயாரும் தேவராஜா, சொக்கலிங்கம், மீனரேகா, ராஜ்மீரா, ஜேசுதாசன், வெனோரிக்கா ஆகியோரின் மாமியாரும் சற்குணம் காலஞ்சென்ற இராஜேந்திரம் (டாக்டர்), அன்னலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும் நல்லதம்பி, திலகவதி (உரும்பிராய்) காலஞ்சென்ற பொன்னுச்சாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(20.01.2006) வெள்ளிக்கிழமை பிரான்சில் நல்லடக்கம் செய்யப்படும். அன்று பிற்பகல் 3 மணிக்கு ஜெப ஆராதனை ஏழாலையில் நடைபெறும்என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை. (45777) (39.45.15.21)
*தகவல்:*
**ந.தங்கராசா, ந.பாலசுப்பிரமணியம்,**
(மருமக்கள்).

## வீர மக்களின் வீர விருது - 2006

### வீர பொதுமக்களைத் தெரிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரல்

இலங்கையின் ''குடிமக்களின் வீரத்தன்மைக்கான மன்றம்'' ஊடாக 2006ஆம் ஆண்டில் நிகழும் நிகழ்வுக்கான விருதுகள் வழங்கிப் பொருத்தமான பொதுமக்களான குடிமக்களை அடையாளம் காண்பதற்கு இப்பொழுது விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) **பூதல் நா தங்க விருது அல்லது வீரமக்கள் வீரத் தங்கப் பதக்கம்**

''சுயேச்சையாக முன்வந்து தன் உயிரைத் துச்சமாக மதித்து பிறர் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற உன்னதக் குறிக்கோளுடன் துணிவையும் ஆளுமையும் வெளிப்படுத்தி நீரிலிருந்தோ, நெருப்பிலிருந்தோ மீட்பதற்கு அல்லது சுரங்கம், வெள்ளம் அல்லது இவை ஒத்த இடையூறுகட்கு அல்லது இவை போன்ற பிற ஆபத்துக்கு ஆட்பட்டு உயிருக்காகப் போராடும் ஆட்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தமக்கு அதன் விளைவாக விளையக் கூடிய உடல் ஊறையோ, உயிர் இழப்பையோ பொருட்படுத்தாமல் மனிதநேயத்துடன் உயர் பண்புடன் செயற்பட்ட இலங்கைப் பொதுமக்களான குடிமக்களில் ஒருவருக்குப் பூதல் நா தங்கப் பதக்க விருது (வீரமக்கள் வீரத் தங்கப் பதக்கம்) வழங்கப்படும்.

(2) **வீரமக்கள் வீர வெள்ளிப் பதக்கம்**

''பூதல் நா தங்க விருது வழங்கப்படுவதற்கு ஆள் ஒருவரால் ஆற்றப்பட்ட அதியுயர் செயற்பாடு வீரச் செயற்பாட்டுக்குச் சமமாக இல்லாதபோது அவ்வாறு மேற்குறிப்பிட்ட பிரிவில் குறிப்பிடப்பட்ட வீரச் செயலை நிகர்த்த செயல் புரிந்த வீரருக்கு வீரக் குடிமக்கள் வீர வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும்.

அ. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 2006.02.28 ஆம் திகதி

ஆ. வீரச் செயற்பாட்டுக்கு உரிய காலம் 2005.01.01 தொடக்கம் 2005.12.31 திகதி வரை

இ. விண்ணப்பம் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

**கசுன் பீ. சுந்திரரத்ன,**
தலைவர், வீரப் பொது மக்கள் மன்றம்
''கல்யாரி'', 137A, பெக்கேகம வீதி,
வலான, பாணந்துறை.

Email: info@civilanbravery.org
SMS: 038-5670050

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கைதடியில் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றை நடத்திவந்த தச்சன் தோப்பைச் சேர்ந்த - சிதம்பரி கணேசரத்தினம், விசுவர் கிருஷ்ணன் ஆகியோரின் சடலங்களையே படத்தில் காண்கிறீர்கள். இவர்கள் இருவரும் திங்கள் இரவு இனந்தெரியாதோரால் தலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். (படங்கள்: நேசன்)



உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு முன்பாக திங்கள் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட சுப்பையா முருகன் என்பவரது சடலம் இது. (படம்: நேசன்)

# படையினரின் அட்டகாசத்துக்கு எதிரான செயற்பாட்டில் சிங்களவர்கள், முஸ்லிம்களும் அணிதிரள வேண்டும்

## தமிழ் எம்.பிக்கள் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு,ஜன.19

வடக்கு-கிழக்கில் தமிழர்கள் மீது படையினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனத்தை தடுத்து நிறுத்தும் முயற்சியில் தமிழர்கள் மாத்திரமின்றி முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்கள் ஆகியோரும் ஒன்றிணைய வேண்டும்.

இந்தப் பிரச்சினை வடக்கு - கிழக்குக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. நாடு முழுவதும் பரவக்கூடிய ஒன்று. எல்லா இனத்தவர்களையும் பாதிக்கக்கூடிய ஒன்று. ஆகவே, அனைவரும் இதற்கெதிராக ஒன்றிணைய வேண்டும்.

இவ்வாறு மலைய மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் குழு அறையில் தமிழ் எம்.பிக்கள் கூட்டாக நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கில் தமிழர்கள் மீது அரச படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனம் மலையகத்திற்கும் கொழும்புக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இது நாடு முழுவதும் பரவுவதற்கு அதிக நாட்கள் எடுக்காது.

அதேபோல் இன்று தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் அடாவடித்தனம் நாளை முஸ்லிம்கள் மீதும் அதேபோல் சிங்களவர்கள் மீதும் மேற்கொள்ளப்படலாம்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்குமுன் அனைத்து இன மக்களும் இணைந்து படையினரின் இந்தக் காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். - இவ்வாறு அவர் கூறினார்.

**முத்துசிவலிங்கம்**

இதில் கலந்துகொண்ட இ.தொ.காங்கிரஸின் எம்.பியும், முன்னாள் அமைச்சருமான முத்து சிவலிங்கம் கூறியதாவது:-

கொழும்பில் தமிழர்கள் மீது பொலிஸார் மேற்கொண்டுவரும் கைது நடவடிக்கைகளால் மலையக இளைஞர்கள், யுவதிகளும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படும் தமிழர்களை விடுவித்துக் கொள்ள மலையகத்திலிருந்து அவர்களின் பெற்றோர்கள் கொழும்புக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை காரணமாக மலையக இளைஞர்கள் கொழும்புக்குத் தொழிலுக்கு வர அஞ்சுகின்றனர். இந்த நிலைமையை இல்லாதொழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். காலங்கடத்தாது அரசு கண் திறக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. - இவ்வாறு அவர் கூறினார்.

**மனோ கணேசன்**

மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் எம்.பி. அங்கு கூறியதாவது:

பாதுகாப்புக் கருதி கொழும்பில் பொலீஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நாம் முழு ஆதரவு தருவோம். ஆனால் பாதுகாப்பை பலப்படுத்துகிறோம் என்ற பெயரில் அநியாயமான முறையில் தமிழரைக் கைது செய்ய நாம் அனுமதிக்க மாட்டோம்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்வது வேறு விடயம். ஆனால், தாம் விரும்பும் ஒருவரைக் கைது செய்துவிட்டு அவரைச் சந்தேகப்படுவதாகப் பின்னர் கூறுவதை ஏற்கமுடியாது. இப்படியானதொரு வேலையைத்தான் கொழும்பில் பொலீஸார் மேற்கொள்கின்றனர்.

பொலீஸார் நேர்மையான முறையில் செயற்படுவதில்லை. பொலீஸாருக்கு எதிராக தினமும் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு 20 முறைப்பாடுகள் செய்யப்படுவதாக அதன் ஆணையாளர் என்னிடம் தெரிவித்துள்ளார்.

பொலீஸ் நேர்மையான முறையில் செயற்பட்டால் எமது ஆதரவு அவர்களுக்கு நிச்சயமுண்டு. தமிழர்களை காரணமின்றி சந்தேகப்பட்டு ஆடு, மாடுகளைப் போல் இழுத்துச் சென்று தடுத்து வைப்பதை ஏற்க முடியாது. - இவ்வாறு அவர் கூறினார். (க)

## தீவக வலய அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.19

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் அதிபர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தீவகக் வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-6)

## இடம்பெயர்ந்தோருக்கு மா விநியோகம்

தென்மராட்சி, ஜன.19

தென்மராட்சி மேற்கு பலநோக்குச் கூட்டுறவுச்சங்க கிளைக் கடைகளில் இடம்பெயர்தோர் நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய மா தற்போது வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான நிவாரண மா சாவகச்சேரி பொலீஸ் நிலைய வீதியில் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வ.ந.நவரத்தினத்தின் வீட்டில் செயற்படும் கிளைக் கடையில் வழங்கப்படுவதாக சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் அறிவித்துள்ளார். (ஐ-117)

# வடமராட்சி கிழக்கில் பணியாற்ற 10 கிராம அலுவலர்கள் இடமாற்றம்

தென்மராட்சி,ஜன.19

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமையாற்றவென யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களிலிருந்து பத்து கிராம அலுவலர்கள் அரச அதிபரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திலிருந்து எஸ்.சச்சிதானந்தம், வீ.சிவசுப்பிரமணியம், நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து ந.தவயோகன், வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து ம.அம்பிகைபாகன், கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து நா.மதனசேகர் ஆகியோர் கடந்த 16ஆம் திகதி தொடக்கமும் நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து த.தஜிதரன், தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலிருந்து இ.இந்திரஜித், பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து மு.கந்தசாமி, பொ.தயாநிதி, அ.உமாசங்கர் ஆகியோர் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கமும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தற்காலிகமாக கடமையாற்றும் ஐந்து கிராம அலுவலர்களும் கடந்த 16ஆம் திகதி தொடக்கம் முன்னர் கடமையாற்றிய பிரதேச செயலகங்களுக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ-117)

## ஓட்டோவில் ஏறிய சிறுமியை மோ.சைக்கிள் மோதியது

தென்மராட்சி,ஜன.19

முச்சக்கர வண்டியில் ஏறமுயன்ற மூன்று வயதுப் பிள்ளையை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று காலை மீசாலையில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த எம்.சைந்தபி (வயது - 3) என்னும் சிறுமியே காயமடைந்தார்.

சிறுமியின் தாய் முச்சக்கர வண்டியினுள் ஏறி இருந்தவாறு வெளியில் நின்ற பிள்ளையைத் தூக்கியபோதே விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த சிறுமி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-117)

# 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' விவகாரம்; 30ஆம் திகதி உயர் நீதிமன்றில் முடிவு

கொழும்பு,ஜன.19

'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' விவகாரம் தொடர்பில் முன்னாள் பிரதமரும்,தற்போதைய ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்த மனு தொடர்பான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 30ஆம்திகதி நடைபெறுமென உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறது.

மேற்படி அடிப்படை உரிமை மீறல் நேற்று உயர்நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்களான ஷிராணி திலகவர்தன, நிமல் திஸாநாயக்க ஆகியோர் முன்நிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் மன்றில் கருத்து வெளியிட்ட பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ,'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' விவகாரம் குறித்து மேலும் விசாரணை நடத்தத் தேவையில்லையென்று சட்ட மா அதிபர் தீர்மானித்திருக்கிறார் எனக் குறிப்பிட்டார். இதனையடுத்து இது விடயத்தில் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணைகள் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறுமென பிரதம நீதியரசர் அறிவித்தார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, குற்றப் புலனாய்வுப் பொலிஸ்பிரிவின் பணிப்பாளர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி டீ.எஸ்.விஜேசிங்க,கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், அப்போதைய பிரதமரும், தற்போதைய ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை விவகாரம் கொண்டுவரப்பட்டதாகக் கூறினார். (க)

## முதலாவது வெள்ளியில் கோழிகளுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜன.19

கோழிகளுக்கான அம்மை நோய்த் தடை ஊசி கந்தர்மடத்தில் உள்ள யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியசாலையில் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் ஏற்றப்படவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரை இத்தடை ஊசி ஏற்றப்படும் என்றும் -

குறைந்த எண்ணிக்கையில் கோழிகளை வளர்க்கும் பண்ணையாளர்கள் குறிப்பிட்ட நாள்களில் கோழிகளை கொண்டுவந்து தடை ஊசியை ஏற்றிக்கொள்ளுமாறும் கால்நடை வைத்தியசாலை வைத்தியர் கேட்டுள்ளார்.

இதுவரை பிரதி வெள்ளிக்கிழமைகளில் மேற்படி தடுப்பு ஊசி போடப்பட்டது. எதிர்வரும் தினங்களில் மாதத்தில் முதல் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே ஊசி ஏற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-202)

# தென்மராட்சி கிழக்கு மக்களின் குடும்ப விவரங்கள் சேகரிப்பு

தென்மராட்சி, ஜன.19

படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களின் விவரங்களே பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 23,24,25 ஆகிய திகதிகளில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பதிவுகள் நடைபெறவுள்ளன.

இப் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்கள் அடையாள அட்டை, நிவாரண அட்டை ஆகியவற்றை எடுத்துவந்து பதிவை மேற்கொள்ளுமாறு கிராம அலுவலர் பொ.நவரத்தினராசா அறிவித்துள்ளார்.

இப் பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்தோர் தற்போது தங்கியுள்ள பிரிவுகளில் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாகவே இப்பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)



## சாயி சிந்தனை

### ஆறுதல் கூறுவதும் தொண்டு தான்!

★ தேன் என்று சொன்னால் இனிக்காது. அதை உண்ண வேண்டும். சேவை என்று சொன்னால் போதாது. செய்ய வேண்டும். மானுட சேவையே மாதவச் சேவை என்னும் மந்திரத்தை மறக்காது நடந்தால், மகாதேவனே மகிழ்வான்.

★ தன்னலமற்ற தொண்டு கலப்படமற்ற தங்கத்திற்கு ஒப்பானது. தன்னுடைய செல்வம், அறிவு, ஆற்றல் ஆகியவற்றை சமுதாயத்திற்கு செலவழிப்பவன் போற்றத்தக்கவன்.

★தொண்டு என்பது ஏதோ பெரிய காரியம் என்று எண்ண வேண்டாம். பிறர் துன்பம் கேட்டு ஆறுதல் கூறுவதும் தொண்டு தான்.

★ பொருள் ஒன்றிருந்தால் தான் பிறருக்கு உதவ முடியும் என எண்ண வேண்டாம். உடல் வலிமையாலும் உள்ளத்திலிருந்து வரும் சொற்களாலும் கூட உதவலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர்களைப் பாதுகாப்பதற்கான

# உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு வக்கில்லாத இந்த அரசின் நாடாளுமன்றை இயங்கவிடோம்!

## சபை அமர்வுகளைக் குழப்பிய பின்னர் தமிழ் எம்.பிக்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜன.19

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வக்கில்லாத - தமிழர்கள் மீது அரச படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனத்தை தடுத்துநிறுத்த இயலாத - தமிழர்கள் அரச படையினரால் படுகொலை செய்யப்படுவது தொடர்பாகவும் கைதுசெய்யப்படுவது தொடர்பாகவும் விசாரணை செய்யாமல் கண்மூடித்தனமாக இருக்கின்ற - இந்த நாட்டு அரசின் வலது கை இந்த நாடாளுமன்றம். அத்தகைய அரசின் நாடாளுமன்றை இயங்க அனுமதிக்கமாட்டோம்.

தமிழர்கள் கொலை செய்யப்படுவது தொடர்பாக இந்த நாடாளுமன்றத்தின் ஊடாக உரிய விசாரணைகளை நடத்துமாறு கேட்டிருந்தோம். அதேபோல் இரண்டு தடவைகள் ஜனாதிபதியைச் சந்தித்தும் உரிய விசாரணைகளை நடத்துமாறும் கேட்டிருந்தோம்.

எமது கோரிக்கை தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுவருகின்றது.

இதனாலேயே நாம் சபையில் ஆர்ப்பாட்டம் செய்து சபை நடவடிக்கைகளை நடத்தவிடாமல் தடுத்தோம்.

இனிமேலாவது உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் நாம் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் செய்து சபை நடவடிக்கைகளை நடத்தவிடாமல் தடுப்பது பற்றி யோசிப்போம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திங்களன்று கூறினார்.

தமிழ் எம்.பிக்கள் திங்களன்று நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்து சபை நடவடிக்கைகளை நடத்தவிடாமல் தடுத்தனர். இரண்டாவது தடவையாகவும் சபை நடவடிக்கைகளை நடக்கவிடாமல் தடுத்தனர். அதைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகள் ஒத்திப்போடப்பட்டன. அதன்பின்னர் நாடாளுமன்றக் குழு அறையில் தமிழ் எம்.பிக்கள் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர். அங்கேயே மேற்படி தகவலை இரா.சம்பந்தன் வெளியிட்டார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண முன்னணி ஆகியன கூட்டாக இந்தச் செய்தியாளர் மாநாட்டை நடத்தினர்.

அங்கு இரா.சம்பந்தன் எம்.பி.மேலும் கூறியதாவது:-

வடக்குக் கிழக்கில் தமிழர்கள் அடுத்தடுத்து படையினரால் கொல்லப்படுகின்றனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

எமது சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோஸப் பரராஜசிங்கம் கொல்லப்பட்டார். திருமலையில் ஐந்து மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவ்வாறு வகை தொகையின்றி தமிழர்கள் படையினரால் கொல்லப்படுகின்றனர்.

இவை அனைத்தையும் தடுத்து நிறுத்துமாறும், உரிய விசாரணைகளை நடத்துமாறும் ஜனாதிபதியையும் நாடாளுமன்றத்தையும் கேட்டிருந்தோம்.

கடந்த மாதம் புங்குடுதீவில் இளம் பெண் ஒருவர் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து நாம் நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினோம்.

சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதற்கென விஷேட விசாரணைக் குழுவொன்றை தாம் அமைப்பார் எனவும் ஜனாதிபதி வாக்குறுதியளித்திருந்தார். ஆனால், எதுவும் நடக்கவில்லை.

அதனையடுத்து எமது சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். திருமலையில் அப்பாவித் தமிழ் மாணவர்கள் ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதேபோல் வடக்கிலும் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர்.

கடந்த வருடம் டிசெம்பர் முதலாம் திகதியில் இருந்து இன்றுவரை ஒன்றரை மாதங்களுக்கும் மேலான காலப்பகுதியில் வடக்கு - கிழக்கில் 41 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். 50 இற்கும் மேலானவர்கள் காணாமல் போயுள்ளனர்.

இந்த நிலையில் இரண்டாவது தடவையும் நாம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினோம். பழைய மாதிரியே விசாரணைகள் நடத்தப்படும் என்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதி கூறினாரே தவிர, இதுவரை எந்த உருப்படியான நடவடிக்கைகளையும் அவர் எடுக்கவில்லை.

இந்த நிலையில் படையினரின் அட்டகாசம் அதிகரித்துக் கொண்டே போகின்றது. வடக்கு - கிழக்கில் மாத்திரமின்றி கொழும்பிலும் அட்டகாசம் புரிகின்றனர். தேவையில்லாது அப்பாவிப் பொதுமக்களைக் கைது செய்துவருகின்றனர்.

புலிகளும் படையினரும் மோதிக்கொள்வது வேறுவிடயம், அதுபற்றி நாம் இங்கு பேசவரவில்லை. புலிகள் என்ற பெயரில் அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்படு வதை நிறுத்தச் சொல்லியே நாம் கேட்கின்றோம்.

திருகோணமலையில் மாணவர்களைக் கொலை செய்தது யாரென்று தமக்குத் தெரியும் என ஜனாதிபதி எம்மிடம் கூறினார். அப்படியென்றால் அவர் ஏன் இன்னும் அவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லை?

தொடந்தும் தமிழர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். ஆனால், எந்தக் கொலை தொடர்பாகவும் ஜனாதிபதி இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் காரணமாகவே, அரசின் வலது கையான நாடாளுமன்றத்தின் அமர்வுகளை நடத்தவிடாமல் தடுத்தோம்.

அரசு இனியாவது உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் தொடர்ந்தும் சபை அமர்வுகளை நடக்கவிடாமல் தடுப்பது குறித்து யோசிப்போம்.

- இவ்வாறு அவர் கூறினார். (க-3)

## உடுவில் இளைஞனைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.19

கடந்த 24ஆம் திகதி கொழும்புக்குச் செல்வதற்கு என்று கூறி மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுச் சென்ற 19 வயது இளைஞன் ஒருவரைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுவிலைச் சேர்ந்த ஜெயபாலரட்ணம் ஜெயபிரசாத் என்னும் இளைஞரே காணாமல் போனவராவார்.

'என்பி. கேபி. 5752' இலக்க மோட்டார் சைக்கிளில் இவர் புறப்பட்டுச் சென்றார் எனவும் இந்த மோட்டார் சைக்கிள் முகமாலையைக் கடந்து செல்லவில்லை என்றும் சோதனை நிலையப் பதிவேடுகள் மூலம் தெரியவந்திருப்பதகாவும் கூறப்பட்டது.

இந்த இளைஞன் காணாமல் போனது தொடர்பாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலீஸ்நிலையம் என்பவற்றிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-117)


நெஞ்சை விட்டு நீங்காத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30-05-1924

மறைவு 30-01-2005

திதி: அபரபக்க பஞ்சமி
19.01.2006

அன்பும் பண்பும் நிறைந்தவரே!
அகிலத்தில் நாம் வாழ வழி வகுத்திரே!
இன்பத்திலும் துன்பத்திலும் துணை நின்றீரே!
எம் வாழ்வில் இமயமாய் மிளிர்ந்திரே!
என்றும் புன் சிரிப்புடன் எழிலுருவாய்த்
திகழ்ந்திரே. எம்மைத்தவிக்கவிட்டு
ஏனையா பிரிந்தீர்?
உங்கள் பாசமும் எம் நினைவில்
நிழலாடுகிறது. நீங்கள் காட்டிய வழியில்
தொடர்கிறது நம் வாழ்வு...
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

(45438)

புளியங்கூடல்
அமரர் கார்த்திகேசு தம்பு

182, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில். குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் ஆள் அடையாள அட்டைகளை துரிதகதியில் பெற்றுக்கொள்ள வசதி

தேசிய அடையாள அட்டை விநியோகம் தொடர்பாக இரண்டு நாள் செயற்றிட்டம் ஒன்று இம்மாதம் நாடுமுழுவதிலும் இடம்பெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் எம்.கே.கீதசேனா மேற்கொண்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டை இன்றி இன்று எதனையும் செய்ய முடியாது. எங்கும் செல்லவும் முடியாது. இந்நிலையில் வாக்களிப்பதற்கும் தேசிய அடையாள அட்டையினைக் கொண்டு செல்லவேண்டிய அவசியமும் அநேகமாக இனிவரும் தேர்தல்களில் சட்டமாகக்கொண்டு வரப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இலங்கையில் இன்று 16 வயதினைப் பூர்த்தியடைந்த அனைவரும் தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ள முடியும். காலத்துக்குக் காலம் தேசிய அடையாள அட்டை தொடர்பாக ஆள் பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் சுற்றறிக்கைகள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தேசிய அடையாள அட்டை விநியோகம் தொடர்பாக ஆரம்பத்தில் இருந்து ஒரே நடைமுறை பின்பற்றப்பட்டது. ஆனால், 1968 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ஆள்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 52ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் கட்டளை அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் 2005 ஆம் ஆண்டின் 29.03.2005ஆம் திகதி வெளியிடப்பட்ட 1386 - 17ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை அதிவிசேடமானது மூலம் முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட தேசிய அடையாள அட்டை விநியோகம் தொடர்பாக 13/8" x 7/8" அளவிலான வர்ண நிழற்படங்களை மட்டுமே விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்க வேண்டும். நாடு முழுவதிலும் துரிதகதியில் தேசிய அடையாள அட்டையினை விநியோகிப்பதற்கான செயற்றிட்டம் ஒன்று தற்போது நடைபெறுகின்றது. இதனை பொதுமக்கள் நன்கு பயன்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். நாடு முழுவதிலும் உள்ள ஆயிரக்கணக்கானோர் அடையாள அட்டை இல்லாமல் இருக்கின்றனர். தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பது தெரியாமலும் நூற்றுக் கணக்கானோர் இருக்கின்றனர். சரியான ஆவணங்களையும் விவரங்களையும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு வழங்குவதன் மூலம் தேசிய அடையாள அட்டையினை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும்.

தேசிய அடையாள அட்டை விண்ணப்பப் படிவத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக பல அரச உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால், கிராம மட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களே முதல் நபராக குறிப்பிடப்பட்டுள்ளார். கிராம அலுவலர் மூலம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தால் வதிவிடத்தை உறுதிப்படுத்திய ஆவணம் தேவை இல்லை. இந்நிலையில் பெரும்பாலான மக்கள் கிராம அலுவலர்கள் மூலமே தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பத்தை அனுப்புவார்கள் என்பதில் ஐயம் இல்லை.

### ஒரே நாளில் தேசிய அடையாள அட்டை விநியோகம்

16 வயதினைப் பூர்த்தியடைந்த ஒருவர் முதல் தடவையாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் ஒருவர் தேசிய அடையாள அட்டையினை ஒரே நாளில் பெற்றுக்கொள்ள முடியும்.

பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியுடன் நிழற்படப் பிரதியையும் மூன்று (03) வர்ண நிழற்படங்களையும் 13 ரூபாவுக்கான முத்திரையினையும் கொண்டு விண்ணப்பதாரி கிராம அலுவலரிடம் செல்லவேண்டும். வயது 16 பூர்த்தியடைந்திருப்பதுடன் 20 வயதுக்கு மேற்படாதவராக இருக்கவேண்டும். கிராம அலுவலர் விண்ணப்பத்தினை அத்தாட்சிப்படுத்தி ஆவணங்களுடனும் அதற்குரிய படிவம் ஒன்றினையும் பூர்த்தியாக்கி விண்ணப்பதாரியிடம் கையளிப்பார். விண்ணப்பதாரி பிரதேச செயலகத்தில் முதலில் கையளித்து பின்னர் மாவட்ட செயலகத்திற்கு கொண்டு செல்லவேண்டும். மாவட்ட செயலகத்தினால் விண்ணப்பம் விண்ணப்பதாரியிடம் கையளிக்கப்படும். விண்ணப்பதாரி நேரடியாகச் சென்று கொழும்பிலுள்ள தேசிய அடையாள அட்டைத் திணைக்களத்திடம் விண்ணப்பத்தினைக் கையளித்து ரூபா 500 /= ஐ கொடுத்து பற்றுச்சீட்டினை பெற்றால் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு முன்னர் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும். காலையிலேயே விண்ணப்பத்தினை கையளிக்க வேண்டும். இதே நடைமுறை பழுதடைந்த தேசிய அடையாள அட்டைக்கான இணைப்பிரதியை பெற்றுக்கொள்வதற்கும், தொலைந்த தேசிய அடையாள அட்டைக்கான இணைப்பிரதியையும் பெற்றுக் கொள்வதற்கும் பின்பற்ற முடியும். பழுதடைந்த, தொலைந்த தேசிய அடையாள அட்டை தொடர்பாக பின்வரும் நடைமுறைகள் இருக்கின்றன.

பழுதடைந்த, தொலைந்த தேசிய அடையாள அட்டையின் இலக்கம் தெரிய வேண்டும். இந்த அடையாள அட்டைகளில் இருக்கின்ற விவரங்களில் எந்த மாற்றத்தையும் செய்யமுடியாது. முன்னைய தேசிய அடையாள அட்டையில் தெரிவிக்கப்பட்ட விவரங்களுடன் மட்டுமே புதிய தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள முடியும். முதல் தடவையாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர் -

ஆ.ப.தி./வி/ 1 இலக்க தேசிய அடையாள அட்டை விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரி விண்ணப்பிக்க வேண்டும்.

16 வயதினைப் பூர்த்தியடைந்த ஒருவர் இந்தப் படிவத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும். தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் திகதியன்று 16 வயதிற்கும் 17 வதியற்கும் இடைப்பட்டவர்கள் மூன்று ரூபா பெறுமதியான முத்திரையையும் 17 வயதிற்கு மேற்பட்டவர்கள் 13 ரூபா பெறுமதியான முத்திரையையும் 13/8"x7/8" அளவிலான நான்கு வர்ண நிழற்படங்களையும் பிறப்புச்சான்றிதழ் மூலப்பிரதியையும் மூலப் பிரதியின் நிழற்படப்பிரதி ஒன்றையும் தமது கிராம அலுவலர்களிடம் கொண்டு செல்ல வேண்டும். மூன்று வர்ணநிழற்படங்கள் விண்ணப்பத்திற்கு போதுமானது. நாலாவது நிழற்படத்தை விண்ணப்பதாரி கொண்டு சென்றால் கிராம அலுவலர் விண்ணப்பம் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டில் நிழற் படத்தை ஒட்டி பற்றுச்சீட்டினை வழங்குவார்.

20 வயதுக்கு மேற்பட்ட ஒருவராயின் இவ்வளவு காலமும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாமல் இருந்த காரணத்தை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற காலதாமதத்திற்கான காரணங்களை கிராம அலுவலர் விசாரணை செய்து உறுதிப்படுத்தி அறிக்கையொன்றினை விண்ணப்பப் படிவத்துடன் பிரதேச செயலருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

### தொலைந்த தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர்

ஆ.ப.தி/வி/7 இல் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரி விண்ணப்பிக்க வேண்டும்.

* தொலைந்த தேசிய அடையாள அட்டை யின் இலக்கம் குறிப்பிடப்பட்ட பொலீஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட் டின் பிரதி.
* பிறப்புச் சான்றிதழ் மூலப்பிரதியுடன் நிழற்படப்பிரதி.
* ரூபா 15/= இற்கான முத்திரை.
* தொழில்/ உயர்கல்வி/ பதவிப் பெயர் அடையாள அட்டையில் குறிப்பிட வேண்டுமானால் மூன்று மாதங்களுக்குள் பெறப்பட்ட திணைக்களத் தலைவரின் சேவைகள் சான்றிதழ்.மூன்று வர்ண நிழற்படங்கள் 13/8" X7/8" அளவிலானது. நான்காவது வர்ண நிழற்படத்தை விண்ணப்பதாரி கிராம அலுவலரிடம் கையளித்தால் பற்றுச்சீட்டில் நிழற்படம் ஒட்டப்பட்டு வழங்கப்படும்.

நிழற்படம் விவரங்கள் தெளிவற்று தேசிய அடையாள அட்டை சேதமடைந்து விண்ணப்பிப்போர் கிழிந்த, அழிந்து போன, தெளிவற்ற தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு செய்ய வேண்டியவை:-

விண்ணப்பப்படிவ இல ஆ.ப.தி/வி/8 இல் விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்பதாரி கிழிந்து அழிந்து போய் தன்வசம் உள்ள அடையாள அட்டை, பதினைந்து ரூபா பெறுமதியான முத்திரை, நான்கு வர்ண நிழற்படங்கள், பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியுடன் நிழற்படப்பிரதி, பெண்களாயின் விவாகச் சான்றிதழ், தொழில் செய்யபவர்களாயின் திணைக்களத்தலைவரின் சேவைகள் சான்றிதழ், மூன்று வர்ண நிழற்படம் அடையாள அட்டை விண்ணப்பத்துக்குப் போதுமானது நான்காவது நிழற்படம் பற்றுச்சீட்டில் ஒட்டப்பட்டு பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

பெண்கள் திருமணம் செய்த பின்னர் கணவனின் பெயருடன் தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்வதற்கு விவாகச் சான்றிதழைச் சமர்ப்பிக்கவேண்டும்.

மூன்று வகையான அடையாள அட்டைகளையும் பொதுமக்கள் மேலே குறிப்பிட்ட நடைமுறைகளைப் பின்பற்றிப் பெற்றுக் கொள்ளமுடியும். கிராம அலுவலர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் விண்ணப்பதாரியிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டதற்கு பற்றுச் சீட்டுக்களை வழங்க வேண்டும்.

கிராம அலுவலர் காலம் தாழ்த்தாது விண்ணப்பப்படிவங்களை சரியான முறையில் தெளிவானதும் விளங்கக் கூடியதுமான கையெழுத்தில் பூரணப்படுத்தி உறுதிப்படுத்தி குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கவேண்டும். பிரதேச செயலகத்தில் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு மாவட்ட செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படும். மாவட்ட செயலகத்திலும் பரிசீலனை செய்யப்பட்டு ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படும். ஆள்பதிவுத் திணைக்களத்தில் இருந்து தேசிய அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்.

**வி.ரி.கதிர்காமநாதன்**

தேசிய அடையாள அட்டைக்குரிய வர்ண நிழற்படத்தை ஆள்பதிவுத் திணைக்களத்தினால் அங்கீகாரம் பெற்ற புகைப்பட நிலையங்களிலேயே விண்ணப்பதாரிகள் எடுத்துக் கையளிக்க வேண்டியது அவசியமாகும்.

முதற் தடவையாக விண்ணப்பிப்போருக்குரிய விண்ணப்பப் படிவம் ஆ.ப.தி/வி/1 இல் இரண்டாம் முறையாக விண்ணப்பிக்கும் ஒருவர் பூர்த்திசெய்து அனுப்பினால் ஆள்பதிவுத் திணைக்களத்திலுள்ள பதிவேடுகளில் இருந்த கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டனையைப்பெற வேண்டிய நிலைமை ஏற்படும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சரியான முறையில் ஆவணங்களை ஒப்படைத்து கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு காலம் தாழ்த்தாது விண்ணப்பத்தை அனுப்புவதன் மூலம் தேசிய அடையான அட்டையினை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியும். *

# பிரதேச சபைக் கட்டடப்பணிகள் ஆளணிப் பற்றாக்குறையால் தாமதம்

யாழ்ப்பாணம்,ஜன.19

போதிய ஆளணி இல்லாததால் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக் கட்டடத்துக்கான நிர்மாண வேலைக்குரிய வரைபடத்தைத் தயாரிக்க முடியாதுள்ளதாக யாழ்.கட்டடங்கள் திணைக்கள பிரதமபொறியியலாளர் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி.தென்மேற்கு பிரதேச சபைக் கட்டடத்துக்கான வரைபடங்கள் தயாரிப்பதற்கு எமது அலுவலகத்தில் போதிய ஆளணி இல்லை. ஆகவே, தாங்கள் இந்நிர்மாண வேலை தொடர்பாக எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

பின்னர் தங்களுடைய தேவைகளை அறிவித்து ஆரம்ப நடவடிக்கைக்கான வரைபடம் மற்றும் உட்கட்டமைப்பு படங்கள் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். வரைபடம் பூர்த்தியானதும் எம்முடன் தொடர்புகொள்ளவும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-185)

வடமராட்சியில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை மெதடிஸ்த திருச்சபை மீன்பிடி வலைகளை வழங்கியது. திருச்சபையின் கட்டைவேலி - பருத்தித்துறை பகுதி போதகர் அருட்திரு ஜி.ஏ.சதீஷ் அடிகளார் பயனாளி ஒருவருக்கு வலையைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். முகாமைக்குரு அருட்திரு. எஸ். அழகராசா அடிகளும் படத்தில் காணப்படுகின்றார்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்).*



# 'டிப்ளோமா' கற்கும் ஆசிரியர்களுக்கான விடுமுறை சம்பள நிலுவையை வழங்க அனுமதி

அச்சுவேலி,ஜன.19

முழுநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படாத விடுமுறைக்கால சம்பள நிலுவையை வழங்குவதற்கு பொது நிர்வாக அமைச்சின் தாபனக் கோவைப் பணிப்பாளர் கல்வி அமைச்சிற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

பட்டதாரி ஆசிரியர்களிற்கான தொழில்சார் கல்வித்தகைமையான பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி பல்கலைக்கழகங்கள் ஊடாக முழுநேரப் பயிற்சியாக வழங்கப்படுகிறது.

இதனை மேற்கொள்ள முழுச் சம்பளத்துடனான விடுமுறையைப் பெறுவதற்கு குறிப்பிட்ட காலம் சேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது முக்கியமான நிபந்தனையாகும்.

சேவைக்கால நிபந்தனையைப் பூர்த்தி செய்யாத நிலையில் முழுநேரப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு சம் பளக் கொடுப்பனவு வழங்காமல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட நடவடிக்கையினால் தாபனக் கோவை விதிமுறையில் உள்ள நிபந்தனையைத் தளர்த்தி பட்டதாரி ஆசிரியர்களுக்கு தொழில்சார் கல்வித்தகைமை அவசியம் என்ற அடிப்படையில் தாபனக் கோவைப் பணிப்பாளர் இடைநிறுத்தப்பட்ட சம்பளக் கொடுப்பனவை வழங்குமாறு கல்வி அமைச்சிற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப இடைநிறுத்தப்பட்ட சம்பளக் கொடுப்பனவை வழங்குவதற்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-11)

# 'அக்கரஹாரா' கொடுப்பனவுக்கு விண்ணப்பக் காலம் நீடிப்பு

அச்சுவேலி,ஜன.19

அரச ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான 'அக்கரஹாரா' காப்புறுதி இழப்பீட்டுக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்க வேண்டியகாலம் சம்பவம் இடம்பெற்றதில் இருந்து மூன்று மாதங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

'அக்கரஹாரா' காப்புறுதித் திட்டத்தின் இழப்பீடுகளுக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு 30 நாள்களுக்குள்ளே விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்டவர் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு 90 நாள்களுக்குள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இழப்பீடு பெறுவது தொடர்பாக சம்பவம் நடைபெற்று 10 தினங்களுக்குள்ளே காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சம்பவம் தொடர்பாகத் தகவல் அறிவிக்கப்படவேண்டும்.

முதற்தடவை இழப்பீடு கோரி விண்ணப்பிப்பவர்கள் கடவுச்சீட்டு புகைப்படம் ஒன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து விண்ணப்பிக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10 . 05 . 1931



மறைவு
20 . 12 . 2005

### திருமதி கனகம்மா சதாசிவம்

கடந்த 20.12.2005 அன்று காலமான எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகளை வழங்கியோருக்கும், சகல வழிகளிலும் உதவியும், ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று 19.01.2006 வியாழக்கிழமை காலை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குருக்கடித்-தோட்டம்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

**குடும்பத்தினர்.**

(45354)


### மானிப்பாய் ஆஸ்பத்திரியில் நோயாளர் அதிகரிப்பு

நவாலி, ஜன.19

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நாளுக்கு நாள் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

தற்போது குடாநாட்டில் அடிக்கடி இடம்பெற்றுவரும் வன்செயல்களினால் நோயாளர்கள் பாதுகாப்புக்கருதி தூர இடங்களுக்குச் செல்லாமல் அருகிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்குச் சிகிச்சை பெறச் செல்கின்றனர். இதனாலேயே மானிப்பாய் ஆஸ்பத்திரியிலும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதேவேளை- இங்கு மகப்பேற்று மருத்துவமனை இருந்தும் பிரசவம் பார்ப்பதற்கு மருத்துவமாது ஒருவர் இல்லாதது தற்போது உள்ள நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ-100)


### வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

## மணல் விநியோக அறிவித்தல்

*எதிர்வரும் 26.01.2006 வரை மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. மீண்டும் 27.01.2006 ஆம் திகதி மணல் விநியோகிக்கப்படும். 27.01.2006 ஆம் திகதி அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மணல் விநியோகிக்கப்படும்.*

\- நிர்வாகம்.

(45760) (21.45.34)

## Sri Lanka Red Cross Society (SLRCS)

### Working in conjunction with the Australian Red Cross (ARC)

**JOB VACANCY - ARC/SLRCS COMMUNITY LIAISON OFFICER (KILINOCHCHI)**

The Australian Red Cross in cooperation with the Sri Lanka Red Cross Society is implementing a housing reconstruction project in Vadamarachy East, Jaffna District.

To assist the general wellbeing and community development of the project beneficiaries a Livelihoods (income generation) component has been included in the Project.

Australian Red Cross is seeking a person with the appropriate skills and experience for the position of Community Liaison Officer for its Program Coordination Office based in Kilinochchi. This person will be required to live and travel within the Kilinochchi District.

**Qualifications:**

- Tertiary degree preferably in one or more of the following: Community Development, Micro-Finance and Economics, Small Business Development and Training, Agriculture and/or Fisheries.
- At least 3 years work experience in a similar position.

**Competencies:**

- Experience in field extension work and delivery of training.
- Working with rural communities in participative activities to increase their welfare.
- Demonstrated discussion / negotiation skills, a strong grasp of concepts of community participation in decision - making, and an ability to work independently.
- Good working ability (written, oral and aural) with the Tamil, Sinhala and English languages.
- An ability to work with and for a team of professionals, of both foreign and local origin.
- Ability to ride a motorcycle and holder of a current motorcycle licence essential. Car licence an advantage.

**Responsibilities**

- Acting as the primary contact between the ARC project manager and beneficiary communities.
- Holding regular meetings with community representatives in order to gauge their opinion and wishes.
- Ensuring that the communities' viewpoints are clearly articulated in the process of house and infrastructure design.
- Prepare and implement community surveys, and analyse the data collected.
- To contribute to project management and work with varied stakeholders that include architects, engineers, project managers, and local authorities.

**Application including Curriculam Vitae:**

Should be submitted to the Director of the Srilanka Red Cross Society in Jaffna (73 Kandy Road) or Kilinochchi (Railway Station Road) Full details of educational background, work experience and referees must be provided.

**Application deadline: 28 January 2006** (C/47402)(21.45.34)

**Danish Demining Group**

## VACANCY NOTICE

Post Title: Administrative Assistant
Duty Station: Jaffna

Major Duties and Responsibilities:

- Answering Phone calls
- Covering the Demining Operation
  Maintain the log sheets
  Maintain the Accident reports
- Collection of information for all operational areas. (Mine field)
- Handling the files.
- Preparing of attendance sheets and Updating Human resources database.
- Perform any other duties as required.
- Should be able to work independently.

Educational Background:

- Bachelor's Degree or Secondary Education with a credit or distinction passes in English;
- Experience in the use of computer applications (MS Word, Excel, Internet and email ) and be able to type Tamil and English.

Language Requirements:

Excellent command of English, the working language of the duty station, both oral and written.

How to apply:

Applications with contact telephone numbers should be sent to reach Danish Demining Group, 18/10, Wyman Road, Jaffna.

Closing Date: Thursday 26th January 2006.
Females are encouraged to apply.

## சொலிடாரின் சுனாமிக் கண்காட்சி

சொலிடார் நிறுவனமானது சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் தம்மால் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணப் பணிகளைப் பிரதிபலிக்கும் கண்காட்சி ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருக்கின்றது.

இக்கண்காட்சியானது சிறார்களின் கைவண்ணங்களினால் உருவாக்கப்பட்ட படங்கள் உட்பட 200 வரையான புகைப்படங்களை உள்ளடக்கியதாகும். இது கடந்த காலங்களில் நோர்வே, பெல்ஜியம், இத்தாலி மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் நடைபெற்று இறுதியாக இங்கும் கால்பதிக்கிறது.

இக்கண்காட்சியில் சுனாமிக்குப் பின்னர் எமது வலையமைப்பினூடாக இதுவரையும் மேற்கொள்ளப்பட்ட வன்னிப் பகுதியில் அகற்றப்பட்ட கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருள்கள் அகற்றும் நடவடிக்கைகள், நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான வீட்டு மாதிரிகள், சமூக வேலைத் திட்டங்கள் போன்ற ஆவணங்களையும் வெளிப்படுத்துவதாகும்.

**தாங்கள் இதனை ஆதரவுடன் பார்வையிடுவதை சொலிடார் பாராட்டி நிற்கிறது.**

காலம்: **2006 ஜனவரி 20ஆம் திகதி** நண்பகல் 12 - பிற்பகல் 4 மணி
**21ஆம், 22ஆம் திகதிகள்** முற்பகல் 10 - பிற்பகல் 5 மணி

இடம்: **சொலிடார் அலுவலகம்**, பரந்தன், கிளிநொச்சி.

solidar
An INGO consortium including
NPA, SAH and ASB

Norwegian People's Aid
ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.
Swiss Labour Assistance SAH

(சி/47354)
(24-11-45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தூதர் கூறிய காட்டமான கருத்துகள் மஹிந்தவை திருப்திப்படுத்த மட்டுமே பயன்படலாம்

## புலிகளின் பிரமுகர் பாலகுமாரனின் ஆய்வு



**கொழும்புக்கான அமெரிக்கத் தூதர் ஜெப்ரி லான்ஸ்டெட் அண்மையில் கூறிய கருத்துகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் நடத்திய ஆய்வின் தொகுப்பு இது. 'புலிகளின் குரல்' வானொலியின் 'அரசியல் அரங்கம்' பகுதியில் பாலகுமாரன் தெரிவித்த இக் கருத்துகளின்ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**

விடுதலைப் போராட்டம் என்பது சர்வதேச நிலைப்பாட்டோடு சம்பந்தப்பட்டது என்பதும் அது தவிர்க்க இயலாதது என்பதும் எல்லோரும் அறிந்ததே.

எங்களுடைய விடுதலைப் போராட்டம் கூட சர்வதேச மயப்படுத்தப்பட்ட ஒருநிகழ்ச்சி நிரலினூடாகத்தான் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது.

விடுதலைப் போராட்டத்தின்கரு, அடிப்படை ரீதியான செயற்பாடு குடியேற்றவாத காலத்தில் உருவாக்கப்பட்டு பனிப்போர் காலத்திலே வளர்ச்சியடைந்து தற்போதைய புதிய உலக ஒழுங்குக்குள்ளும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், ஒரு வித்தியாசமான தன்மையை நீங்கள் பார்க்கலாம். எந்த ஒரு நிலையிலும் நாங்கள் ஒருபக்கச் சார்பெடுக்காமல் விடுதலைச்சார்போடு செயற்பட்டிருக்கிறோம். ஒரு கால கட்டத்தில் இந்தியச் சார்பாக நாங்கள் செயற்பட்டதாக தோற்றப்பாடு இருந்தபோதும் கூட அதுவும் அவ்வாறாக இல்லை என்பது விரைவில் நிரூபிக்கப்பட்டது.

இன்று சர்வதேசச் சூழ்நிலையில் எங்களது நிலைப்பாடு தெளிவாக வைக்கப்பட்டிருக்கிறது. தொடக்கத்தில் ஜே.ஆர். அமெரிக்கா என் பக்கம் என்று சொன்னார். அதன் பின்னர் சந்திரிகா இந்தியா என்பக்கம் என்று சொன்னார். இப்போது மஹிந்தர் தான் யார் பக்கம் என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட அமெரிக்கா, சீனா பாகிஸ்தான் என எல்லோரையும் தன் பக்கம் எனச் சொல்லிக்கொண்டு அந்த முயற்சியில் படுதோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கிறார்.

இந்தநிலையில்தான் சில அறிக்கைகள் வெளிவந்துள்ளன. கொழும்பில் உள்ள சில இனவாதப் பத்திரிகைகள் அவற்றைப் பாராட்டி புகழ்வதையும் நாங்கள் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

உதாரணமாக 'ஐலன்ட்' பத்திரிகையின் தலைப்பிலோ அமெரிக்கத் தூதுவரின் அந்த அறிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து பாராட்டும் வரவேற்பும் கொடுக்கப்பட்டிருந்ததை நாம் பார்க்கிறோம். எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் இது தொடர்பாக அரசியல் எதுவும் பேச விரும்பாத போதும் சில கருத்துகளை முன்வைக்கலாம் என்று நினைக்கின்றோம்.

அண்மையில் ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாசி இங்கு வந்து சென்றதற்குப் பின்னால் அமெரிக்காவின் தூதுவர் ஜெப்ரி லான்ஸ்டெட்டும் சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பாக சில கருத்துகளை முன்வைத்துள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்திடம் ஒரு நல்ல தீர்வு இருக்கிறது என்று அகாசி சொன்னார்.

சிறிலங்கா இராணுவம் நல்ல வலிமையான இராணுவம் என்றும் அதற்குப் பாராட்டும் நற்சான்றிதழையும் ஜெப்ரி லான்ஸ்டெட் வெளியிட்டுள்ளார்.

இது என்னவென்று எங்களுக்குப் புரியாததாக இருந்தாலும்கூட அமெரிக்கா சென்று வந்த மங்கள சமரவீரவுக்கு ஓர் ஆறுதல் பரிசாக, இந்த மாதிரியான அறிக்கையைத் தூதுவர் ஊடாக அமெரிக்க அரசாங்கம் கொடுத்திருக்க முற்பட்டிருக்கக் கூடும் என்று சிலபேர் கருதுகிறார்கள்.

அது எவ்வாறாக இருந்தாலும் அமெரிக்கத் தூதுவரின் உரையிலே இரண்டு வரிகளை நாங்கள் இங்கே கவனத்தில் கொள்கிறோம்.

1. தங்களுடைய மக்களுடைய அடிப்படை ஜனநாயக உரிமைகள் நிறைவேறுவதற்குத் தடையாக இருக்கக் கூடிய தலைவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று கேட்கிறார். அவர் எங்களைத்தான் கேட்கிறார்.

2. தங்களுடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய முதலீடுகளையும் தொழிற்சாலைகளையும் வாய்ப்புகளையும் புறந்தள்ளும் தலைவர்கள் எவ்வாறானவர்கள் என்றும் ஒரு கேள்வி கேட்டுள்ளார். இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருண்மிய சரிவு பற்றி இவ்வாறு அவர் சொல்லியிருக்கக்கூடும் ஏனென்றால் அமெரிக்கா மிக நீண்டகாலமாகவே சொல்லி வருகிறது. எங்களுடைய அக்கறை பொருண்மிய நலன் பற்றியதுதான் என்று. அதனால் அதைத் பற்றி நாங்கள் கதைக்க விரும்பவில்லை.

அவர்கள் இந்த நிலைப்பாட்டுக்கு வரக் காரணம் அண்மையிலே கொழும்பு பங்குச் சந்தை மிகப்பெரிய சரிவை சந்தித்துக்கொண்டு வருகிறது.

அண்மையிலே 'டெய்லி மிரர்' பத்திரிகையில் கூட முழுப் பங்குச் சந்தையின் சொத்து மதிப்பு ஏறத்தாழ 15 பில்லியன் அளவுக்குச் சரிந்திருப்பதாகக் கடந்த திங்கட்கிழமை சொல்லியிருக்கிறார்கள். இவை எல்லாம் நிச்சயமாக அமெரிக்காவிற்கு ஒரு குழப்பத்தைக் கொடுத்திருக்கக் கூடும்.

அமெரிக்காவின் உலக மயமாக்கல் கொள்கையில் பங்குச் சந்தைகள் எல்லாம் ஒன்றிணைக்கப்பட்டு அதற்கூடாகவே வணிகங்களை அமெரிக்கா மேற்கொள்வது அறிந்த விடயம். ஆனால், இந்த மாதிரியான சிக்கலுக்கு நாங்கள் பொறுப்பல்ல என்று நினைக்கிறோம்.

அமெரிக்காவின் அறிக்கையும் அதற்கு முன்னால் ஆஸ்திரேலிய அரசாங்கத்தினது அறிக்கையும் ஒரு நிலைமையைத் தோற்றுவிப்பதாக சிங்களம் நினைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால், உண்மை நிலையை எங்களுடைய மக்களுக்கு சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறது.

தென்னாசியப் பிராந்தியத்தில் தமிழீழச் சிக்கல் தொடர்பாக உலகம் மிகக் குறைந்த கவனத்தையே செலுத்துகிறது என்பது மிகத் தெளிவான செய்தியாக இருக்கிறது.

அதனது புவிசார் அரசியல் மற்றும் பொருண்மிய நலனுக்கு இசைவானதாக கணக்கெடுத்துப் பார்த்தால் உலகத்துக்கு மிகப் பெரிய பாரிய சிக்கல்கள் உலகெங்கும் பரந்து இருக்கிறது. அதைப் பற்றி நாங்கள் சுருக்கமாகப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது.

ஏனென்றால் இந்த மாதிரியான செய்திகளுக்கூடாக எங்கள் மக்கள் கூட யோசிக்கலாம். உலகம் ஏதோ புலிகளுக்கு எதிராக திரும்புகிறது. எங்களுடைய விடுதலைப் போராட்டத்துக்கு உலகம் மாறப் போகிறது என்ற அச்சத்தை உருவாக்குவதற்கான ஒரு கருத்தாக இதைப் பார்க்கக் கூடாது என்பதற்காக இதைச் சொல்லுகிறோம்.

இந்தக் கருத்துகள் சிங்கள மக்களுக்குச் சொல்வதற்காக மிகப் பெரிய மன்றாட்டத்தின் அடிப்படையில் வெளியாகியிருக்கக் கூடும். உண்மையிலே மஹிந்தர் இப்படியான அறிக்கைகளையாவது வெளியிடுங்கள் என்று மன்றாடியிருக்கக் கூடும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் தமிழீழச் சிக்கலில் உலகம் பெரிதாகத் தலையிட முடியாது இருக்கிறது. ஏனென்றால் இதைவிட உலகத்திலேயே இன்று பல்வேறு சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன.

### ஈரான் விவகாரம்

மிகக் கடைசியாகத் தோன்றியிருக்கிற பாரிய சிக்கல் ஈரான் பற்றியது.

ஈரானில் உள்ள அணு ஆலைகளிலே மீண்டும் ஐ.நாவின் அனுமதி இல்லாமல் தங்களுடைய செறிவூட்டப்பட்ட யுரேனியத் தயாரிப்பைத் தொடர்வதற்கான முடிவை ஈரான் எடுத்திருக்கிறது. உலகத்தினுடைய முக்கியமான சகல முடிவுகளையும் புறந்தள்ளி தன்னுடைய தேவைக்காக அணு ஆயுத எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்பதற்காகச் செய்வதாகக் கூறி ஐ.நா.சபையால் முத்திரையிடப்பட்ட பொருள்களை எல்லாம் உடைத்துவிட்டு தன்னுடைய உற்பத்தியைச் செய்ய முயன்று வருகிறது.

மீண்டும் மத்திய கிழக்கிலே இன்னொரு போர் மோகம் சூழக்கூடிய ஆபத்து ஏற்பட்டு பரபரப்பாக பேசப்படுகின்ற செய்தியை நாங்கள் பார்க்கின்றோம்.

அதற்கு அப்பால் மிக முக்கியமான செய்தி இன்று ஈராக்கில் உள்ள நிலைமை.

ஈராக்கின் இன்றைய நிலைமை குறித்து உலகம் மிகப் பெரிய அதிர்ச்சியும் பரபரப்புமாக நடந்து கொண்டிருக்கின்றது.

ஈராக் உலகம் முழுவதும் மெல்ல மெல்ல பயங்கரவாதத்தைப் பயிற்றுவிக்கக்கூடிய - ஏற்றுமதி செய்யக்கூடிய பயிற்றுவிக்கும் கல்வி நிறுவனமாக மாறிவிட்டது என்பது ஆய்வியல் ரீதியாக இன்று நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

இந்தச் செய்திகள் அண்மையில் எகிப்திய அறிக்கைக்கு ஊடாக வெளியில் வந்தது.

அமெரிக்காவுக்கு எதிரான முழுமையான சர்வதேச பயங்கரவாதச் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய - இஸ்லாமிய பயங்கரவாதத்தைக் கைக்கொள்ளக் கூடிய - அவர்கள் சொல்கிற சொற்களுக்கூடாக சொல்வதானால் இஸ்லாமியப் போராளிகளைப் பயிற்றுவிக்கக் கூடிய ஒருதளமாக ஆப்கானை விட ஈராக் மாறிவிட்டது என்று அதிர்ச்சியூட்டும் செய்தி ஒன்று வந்திருக்கிறது.

(வளரும்)

# வாகனத் தொடரணி மீது தாக்குதல்! ஈராக்கில் 10 பேர் பலி; ஒருவர் கடத்தல்!

பக்தாத், ஜன.19

வாகனத் தொடரணி ஒன்றின் மீது தீவிரவாதிகள் பதுங்கி இருந்து தர்க்கியதில் 10 ஈராக்கியர்கள் பலியாகியுள்ளனர். மலாவி நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் உயிருடன் கடத்திச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்று இடம்பெற்றதாக அந்நாட்டு உள்துறை அமைச்சு அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

மூன்று வாகனங்கள் கொண்ட தொடரணி ஒன்று யாமியா மாவட்டத்தில் உள்ள சுரங்கப் பாதை ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது கிளர்ச்சியாளர்கள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. 7 மெய்ப்பாதுகாவலர்களும் மூன்று சாரதிகளுமே இந்தச் சம்பவத்தில் பலியாகியவர்களாவர்.

இறந்த ஈராக்கியர்களும் கடத்திச் செல்லப்பட்ட மலாவி நாட்டைச் சேர்ந்தவரும் எகிப்திய செல்லிடப்பேசி நிறுவனமான இராக்னாவில் பணியாற்றினார்கள் என்பதை அந்த நிறுவன அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

செல்லிடப் பேசி நிறுவனப் பேச்சாளர் செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் எமது இரண்டு பொறியியலாளர்கள் காணாமற்போயுள்ளனர். ஒருவர் மலாவி நாட்டைச் சேர்ந்தவர். மற்றவர் மடகாஸ்கார் நாட்டைச சேர்ந்தவர். ஆனால், மடகாஸ்காரைச் சேர்ந்த பொறியியலாளர் கடத்தப்பட்டார் என்பதற்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இதற்கு முன்னும் இராக்னா நிறுவனத்தின் பொறியியலாளர்களான 6 ஈராக்கியர் மற்றும் 2 எகிப்தியர்களை ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனம் ஒறஸ் கொம் ரெலிகொம் எனும் நிறுவனத்திற்குச் சொந்தமானது என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த நிறுவனம் ஈராக்கில் பலத்த ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சமீபத்திய மாதங்களில் வெளிநாட்டவர்கள் ஈராக்கில் கடத்திச்செல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பாகிஸ்தானில் ஐ.நா.ஹெலிகள் மீண்டும் சேவையில்

லாகூர், ஜன.19

பாகிஸ்தான் அதிகாரத்திற்குட்பட்ட காஷ்மீரில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு ஐக்கியநாடுகள் சபையால் உதவி விமானங்கள் மீள அனுப்பப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பூகம்பத்தால் பாதித்த பகுதிகளுக்கான உதவி விமானங்களின் சேவை அங்கு பெய்து வந்த கடும்மழை மற்றும் பனிப்பொழிவு காரணமாக கடந்த ஞாயிறு முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

விநியோகத்தில் ஈடுபட்டுள்ள ஹெலிகள், நேரத்தை மிச்சப்படுத்துவதற்காகவும் பொருள்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகவும் மேலதிகப் பறப்புகளில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் 8 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தால் 73,000 பேரிற்கு மேல் பலியாகினர். பல லட்சக்கணக்கானோர் வீடு வாசல், உடைமைகளை இழந்துள்ளனர். (ம)

# ஷெரோன் தொடர்ந்தும் 'கோமா' நிலையில்!

ஜெருசலேம்,ஜன.19

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனிற்கு சிகிச்சைகளை மேற்கொண்டுவந்த வைத்தியர்கள் அவருக்கு மீண்டும் செயற்கைச் சுவாசம் வழங்கியுள்ளனர்.

''ஷெரோனது உடல்நிலை தொடர்ந்தும் அபாயக் கட்டத்திலேயே உள்ளது ஆனால் உயிருக்கு உடனடி ஆபத்தில்லை.'' என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். 77வயதுடைய ஷெரோன் இரண்டு வாரத்திற்கு முன் ஆபத்தான பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஷெரோனிற்கு கடந்த ஞாயிறன்று செயற்கைச் சுவாசக் கருவிகள் இன்றி அவருக்கு சத்திரசிகிச்சை செய்ய வைத்தியர்கள் முடிவுசெய்தனர். அவர் இப்போதும் கோமா நிலையிலேயே உள்ளார். அவரால் உடலில் மிகச்சிறிய துடிப்பையே வெளிப்படுத்த முடிகிறது. அவரது உடல்நிலைகருதி பதில் பிரதமரான எஹீட் ஒல்மேட் ஷெரோனது கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார். அவர் தற்போது இடைக்காலப் பிரதமராக முன்மொழியப்பட்டுள்ளார்.

ஷெரோன் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஜெருசலேமில் உள்ள கதேஸ் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் ''பாதுகாப்புக் காரணங்களிற்காக இன்று நள்ளிரவு அவரது சுவாசக் கருவிகள் மீளவும் பொருத்தப்பட்டன'' எனத் தெரிவித்தார்.

கடந்த திங்கள் வைத்தியர்கள் கருத்துத் தெரிவிக்கையில் ''ஷெரோன் தனது கண்களை சிறிது அசைத்தார் எனினும் அவர் கண் விழிப்பதற்கான அறிகுறி இல்லை'' எனத் தெரிவித்திருந்தனர்.

(ம)

# துப்பாக்கிதாரிகளின் சூட்டுக்கு பக்தாத்தில் ஏழு பேர் உயிரிழப்பு

பக்தாத்,ஜன.19

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புப்படையினருக்கு உணவு விநியோகப் பணியை மேற்கொண்டு வந்த நிறுவனத்தின் பணியாளர்கள் ஏழு பேரை, ஈராக்கிய பொலீஸ் போன்று உடையணிந்து வந்த ஆயுததாரிகள் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வியாபார நடவடிக்கைகள் அதிகமாக நடைபெறும் மாவட்டத்தின் மத்திய பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அந்தப்பணியாளர்கள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் சுடப்பட்டனர்.

இரண்டு கார்களில் வந்திறங்கியோர், சைலென்சர் பொருத்தப்பட்ட பிஸ்ரல்களால் அவர்கள் மீது சூடு நடத்தியுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். அந்த நிறுவனத்தின் பணிபுரிந்த மேலும் 4 ஊழியர்கள் சம்பவத்தில் இருந்து தப்பிவிட்டனர். அவர்களில் ஒருவர் பொலீஸ் நிலையத்திற்கு சென்று தகவல் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய தேசியப் படையினருக்கு உணவு விநியோகிக்கும் வர்த்தகத்தையே தாம் மேற்கொள்கின்றனர் என அந்த நிறுவன ஊழியர்கள் தெரிவித்தனர்.

இராணுவத்துடன் நேரடியாக சம்பந்தப்படும் இவ்வாறன இலக்குகள் ஆயுததாரிகளின் தாக்குதல்களுக்கு இலகுவானவையாக இருக்கின்றன என்று செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 747 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 17-01-2006 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4029824-4044396 |

வெற்றி இலக்கங்கள்

**03 12 18 26**

லக்கினம் மிதுனம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 29,63,600/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 36,83,800/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,22,445 | 10/- | 32,24,450/- |
| 2.இலக்கங்கள் | 29,637 | 20/- | 5,92,740/- |
| 1.இல லக்கினம் | 29,370 | 30/- | 8,81,100/- |
| 2.இல லக்கினம் | 2,635 | 100/- | 2,63,500/- |
| 3.இலக்கங்கள் | 787 | 500/- | 3,93,500/- |
| 3.இல லக்கினம் | 79 | 5,000/- | 3,95,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 29,63,600/- | - |
| | | மொத்தம் | 61,50,290/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 72,02,540/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 72,02,540/- தொடர் இல. 5939562 க்கு ஜனவரி சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 டிசம்பர் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 4036056-5-52 |
| திருகோணமலை | 4032438-3-25 |
| மாத்தறை | 4031498-1-07 |
| அம்பாறை | 4042839-2-24 |
| கண்டி | 4037028-1-88 |

# சுற்றாடல் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்.மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் குழுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல உள்ளூராட்சி சபைச் செயலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கேட்டுள்ளார்.

(ஒ-135)

# நூல் வெளியீடு

குருநகர்,ஜன.19

கலையார்வன் கு.இராயப்புவின் 'கடலலைகள் கொஞ்சும் நகர்' நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் கார்மேல் மண்டபத்தில் 'அலை' ஆசிரியர் அ.யேசுராசா தலைமையில் நடைபெற்றது.

ஆசியுரையை வண.பிதா அ.பி.ஜெயசேகரம் அடிகளாரும் மதிப்பீட்டுரையை யாழ்.கல்விக் கோட்டப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராஜாவும் நிகழ்த்தினர்.

இந்நூலின் முதற் பிரதியை வண.பிதா அ.பி. ஜெயசேகரம் வழங்க அருட்கலாநிதி எஸ். ஜெயசீலன் அடிகளார் பெற்றுக்கொண்டார்.

(ஐ-51)

# உரம் விநியோகம்

நவாலி, ஜன.19

உடுவில் கமநல கேந்திர நிலையத்தினால் நவாலி விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 450 ரூபா வீதம் குறைந்த விலையில் உர வகைகள் வழங்கப்படவுள்ளன.

(ஐ-100)

## திருத்தம்

*"பதவிவெற்றிடம்" என்னும் தலைப்பில் கடந்த 15-01-2006 ஞாயிறு உதயனின் 12ஆம் பக்கத்தில் வெளியாகிய செலிங்கோ ஆயுட்காப்புறுதி நிறுவனத்தின் விளம்பரத்தில்-*

*தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்களில் ஒன்று 021-2225778 எனப் பிரசுரமாகிவிட்டது. அதனை 021-222 5998 எனத் திருத்தி வாசிக்கவும்.*

*(ஆ-ர்)*

THE ROYAL COLLEGE OF JAFFNA

*"பாலர் பாடசாலை" தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுத வாசிக்க, கதைக்கப் பயிற்சி. பதிவுக் கட்டணம் 1000/- மாதாந்தம் 100/- 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.*

"THE ROYAL IS THE BEST" (45781)

## தவறிவிட்டது

இராஜேந்திரம் மோகனகலா என்பவருடைய யாழ்.பல்கலைக்கழக B.com சான்றிதழ் (பேழையுடன்) யாழ்.கே.கே. எஸ். வீதியில் இருந்து நாச்சிமார் கோயில் வீதி சந்தி ஊடாக இராமநாதன் வீதிக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இலங்கை மின்சார சபை அலுவலகத்திலோ அல்லது 525/1, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ தொடர்பு கொள்ளவும்.

தொ.பே. 021 222 6604
077 3017806 (45785)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
07 - 05 - 1927



மறைவு
11 - 02 - 2004

## திருமதி கனகம்மா செல்லத்துரை

திதி : பஞ்சமி (19.01.2006)

கண்ணில் குறும்போடும் கனிவான பார்வையோடும்
வாய்நிறையச் சிரிப்போடும் வளைய வருவாயே!- நாம்
வாழ்த்துக்கள் கூறி வாரியணைக்காமல் ஏங்கியழவிட்டு
ஏனென்று கேட்காமல் எங்கம்மா சென்று விட்டாய்.

செல்வா மாளிகை,
இல. 05, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். (45789)

செ.சிறிதேவராசலிங்கம்,
(மகன்).

## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு



- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீனகார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
22, சோமசுந்தரம் அவனியூ.
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777 - 903090
0777- 246117
077 - 9172730

(45779)(26-34)

# மரண அறிவித்தல்

## திருமதி வயித்தி அன்னம்மா



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயித்தி அன்னம்மா நேற்று (18.01.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வயித்தியின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற யக்கே- ஞானாதிக்கம் தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான தேவசகாயம், திருச்செல்வம் மற்றும் ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான எட்வீசம்மா, அலக்சாந்திரா மற்றும் எமிலியானுஸ்பிள்ளை (வவுனியா), மேரி ஜெயா, திருக்குமார்(ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசநாயகம், செபரத்தினம், எமிலியஸ், இந்திராணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றெனோ றெனிதா (ஆசிரியை, யா/மாதகல் சென். தோமஸ் பாடசாலை), றெனோ போல்டன் (சுவிஸ்), றெனோ ஸ்ரால்டன் (பிரான்ஸ்), றினோ யோகதீபன் (இரத்தினபுரி-பல்கலைக்கழகம்), றெஜினோல்ட் ஸ்ரீபன், யசோ நெல்ஸ்மன், அனுசலா(கல்வியியற் கல்லூரி - கோப்பாய்), றொபா, டனோ, யசந்த், அனி, ருக்சனா, மினோசன் (ஜேர்மனி), V.S. நேசகுமார் (இலங்கை வங்கி, சுன்னாகம், லக்ஷினி (சுவிஸ்), சுயேந்தினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், யூலி சோபினியா,யூலியட்டினோசன், சௌமியா, சபானா, பிறன்டன், பியான்டன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2006) வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு பண்டத்தரிப்பு செபமாலை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, செபமாலை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பத்திமா வீதி,
பண்டத்தரிப்பு,
0777 110687 (45796)

தகவல்:
யோ.இராசநாயகம்
(மருமகன்).

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராஜரட்ணம் பூரணம்

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் பூரணம் அவர்கள் நேற்று (18.01.2006)புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் இராஜரட்ணத்தின் (மாப்பாணர் கடை-அச்செழு) அன்பு மனைவியும் செல்வி நல்லதம்பி தங்கம்மா (இளைப்பாறிய அதிபர்), ந.கந்தையா (நிர்வாக உத்தியோகத்தர் - கல்வித்திணைக்களம்), காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தெய்வேந்திரம்(பணியாளர், ஆவரங்கால் சிவசக்தி மண்டபம்), யோகேந்திரம் (கனடா), இராசேந்திரம், பாக்கியதேவி, இந்திராதேவி (ஆசிரியை, சரசாலை சந்திரமௌலீசா), சந்திராதேவி ஆகியோரின் தாயாரும் பூபாலசிங்கம், பூலோகதிரவியம் ஆகியோரின் சிறிதாயாரும் சுந்தரமூர்த்தி, ஆனந்த ராசா, ஏஞ்சலா, செல்வநாயகி, கங்காமௌலீசன் ஆகியோரின் மாமியும் நிதர்சன் (பல்கலைக் கழகம்) டட்ஷாயினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ராணியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2006) வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
அச்செழு. (45795) (18-15-45)

தகவல்:
தெய்வேந்திரம்
(மகன், சிவசக்தி மணிமண்டபம், ஆவரங்கால்).

## திருமதி மனோன்மணி தம்பிப்பிள்ளை

(இராசாத்தி)

கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி தம்பிப்பிள்ளை நேற்று (18.01.2006) புதன் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளை (C.T.B இளைப்பாறிய சாரதி ) அவர்களின் அன்பு மனைவியும் திருமகளின் அன்புத் தயாரும் யுகதாசன் (சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2006) வியாழக் கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெறும், என்பதை உற்றார், உறவினர், அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (சி-47418) (18-15-45)

தகவல்:
த-தம்பிப்பிள்ளை- (கணவர்)



## திக்கரை முருகன் மண்டபம்

# மங்கலகரமான திறப்பு விழா

அடியவர்களுக்கு அருள்பாலித்தருளும் அருள்மிகு திக்கரை முருக மூர்த்தி கோயிலின் வடக்கு வீதியிலே அமைக்கப்பெற்றுள்ள திக்கரை முருகன் மண்டபத்தினை நிகழும் பார்த்திப வருடம் தை மாதம் 7ஆம் நாள் (20.01.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.41 மணிமுதல் முற்பகல் 10.30 மணிவரையுள்ள மங்கலகரமான சுபவேளையில் திறந்துவைக்க திக்கரை முருகனின் திருவருள் கைகூடியுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்து இளைஞர் மன்றம்
*களபூமி - காரைநகர்.*

*திறப்பு விழா சிறப்புற வாழ்த்துவோர்:*

S.V. முருகேசு
*154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

MANOJ AIR TOURS (PVT) LTD
AERO LANKA
(General Sales Agent)

யாழ் காலணியகம் (பாட்டா)
*11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்
*354, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்
*318, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (45778)(42-26-34)

ஓம் விராட விஸ்வப் பிரமனே நமஹ

# திருமண அழைப்பு

*நிகழும் மங்கலகரமான பார்த்திப வருடம் தைமாதம் 6ஆம் திகதி (19.01.2006) வியாழக்கிழமை காலை 8 மணி 45 நிமிடம் தொடக்கம் முற்பகல் 11மணி 15நிமிடம் வரையுள்ள உத்தர நட்ஷத்திரமும் சிங்க லக்கினத்தில் வரும் சுபமுகூர்த்த வேளையில்.*

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**விஜயகாந் (விஜி)**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**தாட்சாயினி (தாட்சா)**
அவர்களுக்கும்

*இறைவன் திருவருள் துணைகொண்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் நடத்த திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத்தொடர்ந்து மறுநாள் பிற்பகல் 4 மணியளவில் மணமகன் இல்லத்தில் இடம்பெறவுள்ள வரவேற்புபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

தங்கள் நல்வரவை நாடும்.

திரு. திருமதி தேவராஜா
மல்லிகாதேவி குடும்பத்தினர்,
விஜி ஜுவல்லர்ஸ் அன்ட் வேக்சொப்,
சந்தை வீதி உடுப்பிட்டி. (45784)(54-26-34)

திரு. திருமதி இ.விக்னேஸ்வரன்
நிர்மலாதேவி குடும்பத்தினர்.
நிறஞ்சன் நகைமாடம்
'நிர்மலா வாசா'
சந்தை வீதி, உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் கிளிநொச்சி விளையாட்டரங்கில் ஆரம்பம்!

கிளிநொச்சி,ஜன.19

பொதுமக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் கிளிநொச்சி பொது விளையாட்டு அரங்கில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பெரும் எண்ணிக்கையான பெண்களும், ஆண்களும் திரண்டு வந்து தற்காப்புப் பயிற்சியில் கலந்துகொண்டனர்.


இந்தப் பயிற்சி ஆரம்ப நிகழ்வு லெப்.கேணல் ராஜன், கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் முன்னதாகப் பொதுச் சுடரினை நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஏற்றி வைத்தார்.

தேசியக்கொடியினை மட்டக்களப்பு மா்வட்ட துணைத் தளபதி ரமணன் ஏற்றினார். தொடர்ந்து மக்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டது.

கிளிநொச்சியிலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டனர். நிகழ்வில் சாள்ஸ் அன்ரனிப் பிரிவுத் தளபதி நகுலன், மட்டக்களப்பு மாவட்ட துணைத் தளபதி ரமணன், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.


அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் உட்பட நிதித்துறையின் வணிகப் பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

(ஐ)











பொதுமக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பமாகியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா மங்கள விளக்கேற்றி பயிற்சி ஆரம்ப வைபவத்தைத் தொடக்கி வைக்கிறார்.

வைபவத்தில் கலந்துகொள்ள வந்திருந்த புலிகளின் பிரமுகர்களையும் பயிற்சி பெறுகின்ற பெண்கள் மற்றும் ஆண்களையும் படங்களில் காணலாம். [ஐ]

## வாசகர் திருமுகம்

### இரவு நேரத்தில் நடமாடத் தடையா?

குடாநாட்டில் கடந்த சில வாரங்களாக தினமும் எங்கோ ஓர் இடத்தில் குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூடு போன்ற ஏதாவதொரு சம்பவம் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. இந்த அசாதாரண சூழ்நிலையில் இரவு 7 மணிக்குப் பின் மக்கள் தமது நடமாட்டத்தை வெகுவாகக் குறைத்துக் கொண்டுள்ளனர். இது மக்கள் தாம் வீணான கெடுபிடிகளுக்கு ஆளாவதைத் தவிர்க்கவும். தம்முயிரைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஏற்படுத்திய தற்பாதுகாப்பு என்று கூறலாம்.

ஆனால், இரவு வேளையில் ஏற்படும் திடீர் சுகயீனங்கள், விஷக் கடிகள், பிரசவவலி போன்றவற்றிற்கு வைத்தியசாலைகளுக்குச் செல்வதற்கும் மக்கள் அஞ்சுகின்றனர். இதனால் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இரவு வேளைகளில் வைத்தியசாலைக்குச் சென்றவர்கள் சுடப்பட்டுமுள்ளனா். 1996 - 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரவு நேர ஊரடங்கு அமுலில் இருந்த வேளைகூட மக்கள் அரிக்கன் விளக்கினை கையில் ஏந்தியபடி வீதிக்கு வந்து வைத்தியசாலைகளுக்குச் செல்லக்கூடியதாக இருந்தது. ஆனால், தற்போது ஊரடங்கு அமுலில் இல்லாத போதும்கூட வெளியே வரமுடியாத நிலை உள்ளது. இந்த நிலையில் வைத்தியசாலைகளுக்கு இரவு நேரத்தில் செல்வதற்கு தாம் என்ன செய்யவேண்டும் என்று தெரியாத நிலையில் மக்கள் குழப்பத்தில் உள்ளனர்.

எனவே, இது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் படைத் தலைமையுடன் தொடர்புகொண்டு இதற்கான சரியான நடைமுறையை அறிவிக்கவேண்டும். ஒரு வேளை 'ஊரடங்கு அமுலில் இல்லை மக்கள் இரவு நேரத்தில் நடமாடலாம்' எனப் படைத்தலைமை கூறக்கூடும். ஆனால், இரவு நேரத்தில் நடமாடியவர்களுக்கும் வைத்தியசாலைக்குச் சென்றவர்களுக்கும் என்ன நடந்ததென்பதை படைத்தலைமைக்கு அரச அதிபர் எடுத்துக்கூறி சரியானதொரு தீர்வை - நடைமுறையை - மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என இம்மட[illegible] தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருநெல்வேலி.- வே.சந்திரசேகர்.

## சுகாதாரப் பகுதியில் 47 சிற்றூழியர்கள் பல்வேறு பணிகளுக்குப் பதவி உயர்வு

குருநகர்.ஜன.19

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களில் சிற்றூழியர்களாக நிரந்தரக் கடமையாற்றி வரும் 47 ஊழியர்கள் காரியாலய காரிய சேவகர், இயந்திர மேற்பார்வையாளர், பம் இயக்குநர், காவலாளி, சிற்றூழியர் மேற்பார்வையாளர், உணவுப் பரிபாலகி, தொலைபேசி இயக்குநர், சைக்கிள் ஏவலாளர், சமையலாளர் ஆகிய பதவிகளுக்கு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சால் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

கே. யோகநாதன், ம.நல்லையா, பி.இராஜேந்திரம் ஆகியோர் காரியாலய காரிய சேவகர்களாகவும் -

எம்.ஆனந்தராஜா, வி.நாகதாஸ், எஸ்.சுரேஸ்குமார், என்.பரமநாதன் ஆகியோர் சமையலாளர்களாகவும்-

என். முரளிதரன் சைக்கிள் ஏவலாளராகவும் - எம்.யோகேஸ்வரன் தொலைபேசி இயக்குநராகவும், செல்வி ஏ.வசந்தராணி உணவுப் பரிபாலகியாகவும் -

கே.அன்பழகன், எம்.அருளானந்தம், பி.விஜயலக்சுமி, எஸ். சந்திராதேவி, ஏ.விஜயா, பி.திருச்செல்வம், ஏ.ஞானமணி, எஸ்.இராமச்சந்திரன், எஸ்.ஜெயதீசன், ஏ.கௌரிசிவம், எஸ். இராசு ஆகியோர் சிற்றூழியர் மேற்பார்வையாளர்களாகவும் -

எஸ். செல்வநாதன், ஏ.ஜெகதீஸ்வரன், எஸ். மகேஸ்பாலன், வி.குகதாசன், ஆர். சண்முகராஜா. எஸ்.எட்வேட், பி. கஜேந்திரன், கே.செந்தில்நாதன், எம்.ஆனந்தராஜா, என்.தர்மராஜா, பி.தேவச்சந்திரன், எஸ்.சிவகாந்தன் ஆகியோர் காவலாளிகளாகவும்-

என்.ஆனந்தராஜா, ஆர்.இராஜேஸ்வரன், இலங்கேஸ்வரன், எம்.சரவணன், ஏ.மரியதாஸ், ஐ.துரைரட்ணம் ஆகியோர் 'பம்' இயக்குநர்களாகவும்-

ஜி.பிரகாஷ், கே.கிரிதரன், எஸ்.பிரதீபன் ஆகியோர் இயந்திர மேற்பார்வையாளர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இவர்களின் பதவி உயர்வுக் கடிதங்கள் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளன.

இவர்கள் 2006 ஜனவரி 2ஆம் திகதி தொடக்கம் இப்பதவி உயர்வைப் பெற்றுள்ளார்கள். (ஐ-51)

### நவாலி வை.எம்.சீ.ஏ பாலர் பாடசாலை திறப்பு

நவாலி வை.எம்.சீ.எயின் புனரமைப்புச் செய்யப்பட்ட பாலர் பாடசாலைத் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நவாலி வை.எம்.சீ.எ. தலைவர் ஆசிரியர் ஏ.டி. அதிசயதாசன் தலைமையில் திறப்பு விழா இடம்பெற்றது. ஆசியுரையினை நவாலி தென்னிந்தியத் திருச்சபை வணபிதா. ஏ.எஸ். தேவகுணானந்தன் வழங்கினார். புனரமைப்புச் செய்யப்பட்ட பாலர் பாடசாலைக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி. தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். (ஐ-185)

## சங்கானை ஆஸ்பத்திரி விடுதிகளை உடன் புனரமைக்குமாறு கோரிக்கை

குருநகர்.ஜன.19

சங்கானை சுற்றயல் கூறு அரசினர் வைத்திய சாலை வளவில் உள்ள ஆஸ்பத்திரி விடுதிகளைப் புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு [illegible] வைத்திய அதி [illegible] பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தைக் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையில் இந்த வைத்தியசாலை விடுதிகளைப் புனரமைக்கவேண்டியது அவசியம் எனவும் மலகூட வசதிகள், குளியல் அறைகள், விறாந்தைகள் மற்றும் சுவர்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுவதனால் இவைகளை உடன் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண் டும் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### விற்பனைக்கு

மோட்டோ றோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 2263111. (45761)

சண்டெல் தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6622247. (45765)

சிறிது காலம் பாவித்த றொபின் 20 நீர் இறைக்கும் இயந்திரம் 30 அடி நீளமான கிணற்று வயருடன் விற்பனைக்குண்டு. விலை 43,000 ரூபா ஆகும். தொடர்பிற்கு சி.சற்குணம், இணுவில் தெற்கு. தொ.பே: 071 2516851. (45410)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

29, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற இடத்தில் 1¼ பரப்பு காணியுடன் எல்லா வசதிகளுடனும் சிறிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6745812, 077 6198191. (45768)

### ஆட்டோ விற்பனைக்கு

NPJN - ஜ தொடர் இலக்கமாகக் கொண்ட பட்டர் கலர் ஆட்டோ விற்பனைக்குண்டு. தொடர்பு: தவக்குமார், தாவடி தெற்கு, பாடசாலை வீதி, கொக்குவில். 077 6699277, 021 4590842 (3 மாதம் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு. (45763)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (45356)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

அனைத்து தடுப்பூசியும் போட்ட 4½ மாதம் நிரம்பிய GERMAN SHEPERED நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 3068775. (சி/47412)

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 386/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (45444)

### தேவை

மானிப்பாய், நவாலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் ஒரு அறை வாடகைக்குத் தேவை. ஆசிரியர், தனியார் துறை K.R.சிவம் B.Com, சிவன் மாளிகை, மாரிஅம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு, காப்புறுதி முகவர் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (45440)

### தவறிவிட்டது

3ஆம் கட்டை, துன்னாலை, கரவெட்டி என்ற முகவரியை உடைய சிவனடியான் சிவரூபன் என்பவருடைய தே.அ.அட்டை இல. 831131950V மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்புநிற பேர்ஸ் யாழ். பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். மந்தாகினி தொலைத் தொடர்பகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3501, 0777 170746. (45236)


## நெடுங்குளத்தில் வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

உலக வங்கி வீடமைப்பு புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் நெடுங்குளம் கிராமத்தில் நிறுவப்பட்ட வீடுகள் கடந்த 7ஆம் திகதியன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உலக வங்கி வீடமைப்பு புனர் நிர்மாணத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர் நிர்மாணதுக்கான மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நாதன், யாழ் மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வே.சாம்பசிவம், யாழ். பிரதேச செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க.மகேஸ்வரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் கி.வினோதானந்தன், நெடுங்குளம்முன்னாள் கிராம அலுவலர் செல்வி இ.கமலவேணி, நெடுங்குளம் கிராம அலுவலர் என்.சபாரட்ணம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-190)





20.01.2006 வெள்ளிக்கிழமை காலை 7.36 மணி - 8.24 மணி வரை

ஐங்கரன் அடியார்களே!

ஸ்ரீமத் விராட்புருஷனது இடை நாடிஸ்தானமென விதந்து ஓதப்படுவதும், இந்து சமுத்திரத்தின் முத்தென மிளிர்வதும், இயற்கை எழில் சூழ்ந்து விளங்குவதும், நாயன்மார்களால் பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் முதலான சிவஸ்தலங்களைத் தன்னகத்தே கொண்டதும், அருணகிரிநாதரால் பாடல்பெற்ற கதிர்காம க்ஷேத்திரத்தை உடையதுமான இவ்விலங்காதீவின் வட பால் சைவமும், தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் தென்மேல் பால் சப்த தீவுகளில் சைவத்தமிழ் மணம் கமழ்வதும், வாரி வழங்கும் வள்ளல்களால் சிறப்புற்றோங்கு வதுமான புங்குடுதீவின் மேல் பால் இருபிட்டி கிராமத்தில் பெரியபுலம் என்னும் பதியில் வேண்டுவோர்க்குவேண்டும் வரங்களை வாரிவழங்கும் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கும், நடராஜர், சுப்பிரமணியர், பஞ்சமுக விநாயகர் , வைரவர், நவக்கிரகநாயகர், சண்டேஸ்வரர் புதிதாக அமைக்கப்பட்ட மகாலக்ஷ்மி ஆகிய மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான பார்த்திப ஆண்டும் உத்தராயணமும், ஹேமந்தருதுவும், தை மாதமும் 7ஆம் திகதியும் (20.01.2006) வெள்ளிக்கிழமையும் ஷஷ்டித்திதியும், உத்தர நக்ஷத்திரமும், சித்தாமிர்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 7.36 மணி முதல் 8.24 மணிக்குள் வரையுள்ள கும்பலக்ன சுபமுகூர்த்தத்தில் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளதால் அத்தருணமும் அதற்கு முன் பின் நடக்கும் கிரியாகாலங்களிலும் அடியார்கள் வந்து தரிசித்தும் பால், தயிர், இளநீர், பூக்கள், மாலைகள் தந்துதவியும் எம்பெருமானின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

### கிரியா கால விவரம்

19.01.2006 வியாழக்கிழமை காலை 6 மணிக்கு விநாயக வழிபாடு, விஷேடசாந்தி, தர்ப் பணம், யாகபூஜை, பாவனாபிஷேகம், விஷேடதிரவிய ஹோமம், தீபாராதனை, திருமுறை பாராயணம்.

தைலாப்பியங்கம் (பக்தர்கள்எண்ணெய் சாத்துதல்) காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை

மாலை 6 மணிக்கு யாகபூஜை, ஹோமம், பிம்பசுத்தி, பிம்பரக்ஷாபந்தனம், ஷடத்தவ நியாசம், ஸ்பர்சாஹுதி, யாகதீபாராதனை, வேதஸ்தோத்திர தேவார பாராயணம், நிர்த்த கீதபேரி வாத்திய சர்வாஞ்சலி சமர்ப்பணம், ஆச்சார்ய பூஜனம் (வஸ்திர உத்தரீயம் வழங்குதல்.

20.01.2006 வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு யாக பூஜை, மகாபூர்ணாகுதி, அந்தர்பலி, பகிர்பலி, தீபாராதனை, வேதஸ்தோத்திர தேவார பாராயணம்.

காலை 7.30 – 7.40 மணிக்குள் ஸ்தூபிகள் அபிஷேகம், பிரதான கும்பங்கள் வீதி பிரதக்ஷணம், புஷ்பாஞ்சலி.

காலை 7.40 – 8.24 மணிக்குள் கும்பாபிஷேகம், கற்பாவரண அபிஷேகம், தசதர்சனம், ஆசியுரைகள், மகாபிஷேகம், தீபாராதனை, மகேஸ்வரபூஜை (அன்னதானம்) இரவு திருவூஞ்சல், சுவாமிவீதியுலா.

### குருமார் விவரம்

சர்வபோதகம்

'பிரதிஷ்டாசிரோண்மணி', 'ஜோதிட பூஷணம்', 'விநாயக பூஜா துரந்தரர்'

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச இரகுநாதக்குருக்கள் (வவுனியா)

பிரதிஷ்டா பிரதமகுரு

'பிரதிஷ்டா திலகம்', 'சிவாகம கிரியா சிரோண்மணி', 'பிரதிஷ்டா வித்தகர்', 'கிரியா தத்துவநிதி'

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்(சிவன் தேவஸ்தானம், புங்குடுதீவு.)

**அனைவரும் வருக! விநாயகரின் அருள் பெறுக!!**

**ஆலய பரிபாலன சபையினரும், கும்பாபிஷேக ஏற்பாட்டுக் குழுவினரும்**

**குறிப்பு: பெருங்காடு சந்தியிலிருந்து ஆலயத்திற்கு சென்று வருவதற்கு விசேட போக்குவரத்துச் சேவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.**

(45755)(32-15-34)



### மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்

**பௌர்ணமி நிலா சஞ்சிகை வெளியீடும் பொதுக் கூட்டமும் பிற்போடுதல்**

*21.01.2006 இல் நடைபெறவிருந்த பௌர்ணமி நிலா மலர் வெளியீடும், 22.01.2006 இல் நடைபெறவிருந்த பொதுக்கூட்டமும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இவை நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.*

செயலாளர்,
S.லீலாகிருஸ்ணன்.J.P

(45769)(32-34-15)


## சிறுவன் மீது தாக்குதல்

தென்மராட்சி, ஜன.19

திருவெம்பாவை பூஜைக்காக ஆலயத்தில் தங்கி நின்ற சிறுவன் கொட்டன் அடிக்கு இலக்கானான்.

இச்சம்பவம் கச்சாயில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த மு.வைகுந்தன் (வயது-16)என்ற சிறுவனே காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-117)

## கும்பாபிஷேகம்

நவாலி, ஜன.19

சுதுமலை தெற்கு, ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில் புனருத்தாரன, நூதன பிம்ப, அஷ்டபந்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேக நாளை வெள்ளிக்கிழமை காலை 9.40 மணி முதல் முற்பகல் 10.16 மணி வரையுள்ள மீன லக்கின சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் நடைபெறும். (ஐ-100)


### யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை

**உலோக வார்ப்பு தொழிற்பயிற்சி (காலம் 6 மாதங்கள்)**
(அலுமினியம், பித்தளை, சீனச்சட்டி (Cast-Iron)
**(Six months Certificate Course in Foundry Practice)**

*6 மாத காலத்தில் சுயதொழிலில் ஈடுபட விரும்பும் அல்லது தொழில்வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் ஆண்டு 10 வரை படித்த மாணவர்களுக்கு கற்கும் பயிற்சிநெறி*

**உற்பத்தி செய்யும் பொருள்கள்**

* நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
  *பம்ப் கேசிங், இம்ப்பளர், டிஸ்டன் பீஸ், என்சில்ட், கூலிங் வேன்* (Cooling fan) *வேன் கவர்* (Fan cover).
* சமையல் பாத்திரங்கள்
  *தாச்சி, தோசைக்கல் போன்றவை*

குறிப்பு:
*ஒழுங்கான பயிலுநருக்கு நாளாந்த ஊக்குவிப்புப் படி வழங்கப்படும்.*

*செய்முறையில் கூடிய புள்ளிகள் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.*

*விண்ணப்பப்படிவம் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொழிற்பயிற்சி 23th January 2006 இல் ஆரம்பிக்கப்படும். விவரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**DIRECTOR**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

Email:jcit@sltnet.lk Tel.No.: 0602213139

(சி/47409)(42-32-34-15)

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட நினைவு மலர் கவர் படங்கள் கூல் லெமனேசன் செய்து பெற்றுக்கொள்ள,
**ஸ்ரீபதி நேரச்சகம்**
604 K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்
021-222 8250 , 0777 222422

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

80% off

வகுப்புக்கள் ஆரம்பம்:-
Batch I :- 20/01/2006 - 11.30-01.30
Batch II :- 21/01/2006- 11.30-12.30
Batch II :- 22/01/2006- 01.00-02.00

**Diploma in Computerized Accounting**

*Accpac + Quick books pro +MYOB*

வகுப்புக்கள் ஆரம்பம்:-
21/01/2006 *Morning 08.30-09.30*
*Evening 04.00-05.00*

அளப்பரிய அன்பளிப்புகள் இனாம்
Kit — WESTERN UNION MONEY TRANSFER

வெளிநாட்டிலிருந்து உறவினர்கள்
WESTERN UNION மூலம் பணம் அனுப்பி பணப் பரிமாற்றல் இலக்கம் (MTCN 10 இலக்கங்கள்) உங்கள் கைகளில் கிடைத்துவிட்டதா?
வங்கிக்கணக்கு தேவையில்லை, 24 மணி நேரமும் ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் அன்பளிப்பும் கிடைக்க உடன்நாடுங்கள்.
மேலும் சகல விதமான தொலைபேசி அட்டைகள் Dialog GSM Kit தொலைபேசி அட்டைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,
உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள், பொதிகள் உடனுக்குடன் அனுப்பிட




**SRI MURUGAN**
**TELE COMMUNICATION AGENCY POST OFFICE**
303, K.K.S. ROAD, JAFFNA. T.P.: 021 222 5392.
E.mail : srimurugan@eureka.lk
இன்னும் பல சேவைகளையும், அன்பளிப்புகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளவும்.


### கண்ணீர் அஞ்சலி

*இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் யாழ்.அலுவலக விற்பனை உத்தியோகத்தராகவும் சேமநல உத்தியோகத்தராகவும் கடமையாற்றும்* **நா.போஜன்** *அவர்களின் அன்பு மனைவி*

**அர்த்தநாரீஸ்வரி போஜன்**

*மற்றும் அவர்களின் அன்புப் புதல்விகளான*

**திருமதி ரேணுகா தியாகேஸ்வரன்**
**செல்வி சண்ணுகா போஜன்**

*ஆகியோரின் அகால மறைவினையிட்டு அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைச் செலுத்தி அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன் இத்துயர சம்பவத்தில் படுகாயமடைந்த நா.போஜன் மற்றும் அவரது புதல்வன் போ.உல்லாசனன் ஆகியோர் விரைவில் குணமடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்.**
*கொங்கிற் பகுதி, விற்பனைப்பகுதி, விநியோகப்பகுதி, வேலைகளப்பகுதி.*

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்,
உரும்பிராய்.
(சி/47407)(32-34-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிகளின் அபிவிருத்தி நிதிக்காக
தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு-கிழக்கு மாகாண
முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலையத்தினரால் நடத்தப்பட்ட

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு 308836 Cd Dawn
2ஆம் பரிசு 123193 TVS xl super
3ஆம் பரிசு 017905 TV, Deck, Antena

**விசேட பரிசு**

முதலாம் பரிசு 182303
2ஆம் பரிசு 383332
3ஆம் பரிசு 380110
4ஆம் பரிசு 376454
5ஆம் பரிசு 116277

**ஆறுதல் பரிசுகள்**

முதலாம் பரிசு 286068
02ஆம் பரிசு 466586
03ஆம் பரிசு 232240
04ஆம் பரிசு 385534
05ஆம் பரிசு 324396
06ஆம் பரிசு 360991
07ஆம் பரிசு 054249
08ஆம் பரிசு 283860
09ஆம் பரிசு 036407
10ஆம் பரிசு 110992
11ஆம் பரிசு 074295
12ஆம் பரிசு 245704
13ஆம் பரிசு 107214
14ஆம் பரிசு 085083
15ஆம் பரிசு 375944
16ஆம் பரிசு 089155
17ஆம் பரிசு 350815
18ஆம் பரிசு 267339
19ஆம் பரிசு 362159
20ஆம் பரிசு 252385
21ஆம் பரிசு 358613
22ஆம் பரிசு 324445
23ஆம் பரிசு 273323
24ஆம் பரிசு 115779
25ஆம் பரிசு 218684

எமது அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு சிறப்புற நடத்த உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரியப்படுத்துவதுடன், அதிர்ஷ்டப் பொருள்களை 15.02.2006 வரையும் தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்.
(சி.47420) (18-12-16)



இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக் கிளை அலுவலகத்தால் 'சிறுவர் பொன்னரும்பு' சிறுவர் சேமிப்புக் கணக்கை வைத்திருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு மாணவர்களுக்கு அவர்களது தந்தை விபத்தில் உயிரிழந்ததால் வழங்கப்பட்ட காப்புறுதித்தொகை வைப்பிலிடும் நிகழ்வில் காப்புறுதித் தொகை வைப்பிலிடப்பட்ட சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்-பிரியன்)

# 'சிறுவர் பொன்னரும்பு' சேமிப்பு கணக்கில் காப்புறுதித் தொகை வைப்பிலிடும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.19

இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக் கிளையில் சிறுவர் பொன்னரும்பு சேமிப்புக் கணக்கு வைத்திருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவருக்கு அவர்களின் கணக்கின் 10 மடங்கு காப்புறுதித் தொகை வைப்பிலிடும் நிகழ்வு நேற்று மாலை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள மேற்றரக்கிளை அலுவலகத்தில் இடம்பெற்றது.

விபத்தொன்றில் தந்தையை இழந்த மாணவர்கள் இருவருக்கே இந்தக் காப்புறுதித் தொகை வழங்கப்பட்டது.

இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக் கிளையின் பிரதம முகாமையாளர் என்.சிவரத்தினம் காப்புறுதித் தொகை வைப்பிலிடப்பட்ட கணக்குப் புத்தகத்தை சம்பிரதாய பூர்வமாக மாணவர்களிடம் கையளித்தார்.

யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களான 2006 ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு மாணவன் சிவபாலன் சந்துரு, தரம் 8 மாணவர் சிவபாலன் சிந்துஜன் ஆகியோருக்கே காப்புறுதித் தொகை வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக்கிளையின் வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் பி.விவேகானந்தன் பாடசாலை மாணவர் சேமிப்பு பிரிவின் இணைப்பதிகாரி வி.ஆர்.சுதாகரன் மற்றும் வங்கி ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஓ-12-14)

## வழிகாட்டல் செயல் நூல்கள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் கல்விச் செயற்றிட்டங்களுக்கான கற்றல் வழிகாட்டல் செயல் நூல்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்துள்ளது.

இந்த நூல்களை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-117)

## 90ஆம் நாள் நினைவை நெஞ்சில் நிறுத்தி...

மலர்வு 26 - 01 - 1983



உதிர்வு 22 - 10 - 2005

அமரர்
**கந்தசாமி வினோத்ராம்(ராம்)**

சிரிக்காமல் இருந்து கொண்டு
சிரிக்க கதை சொல்வாயே!
இன்று..................
அழுதிடா தொழிந்து கொண்டு
எமையெல்லாம் அழ வைப்பதேனோடா?

நி.மு.நீர்வேலி,யாழ்ப்பாணம்
த.மு.13 2/2,திருவையாறு,
கிளிநொச்சி.
(சி.47419) (18-12-16)

பிரிவால் வாடும்....
றோய் மதிவதனன்(ஜேர்மனி),
சுதா அக்கா(யாழ்ப்பாணம்),
கௌரிசங்கர்(லண்டன்).

# கட்டாக்காலி நாய்களை அழித்தல்

யாழ்ப்பாணம்,ஜன.19

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திருநெல்வேலி சந்தைச் சுற்றாடல், தபால்கட்டைச் சந்தி, தாளையடி ஆகிய பகுதிகளில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன.

எனவே, வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறும், வீதியில் திரியும் நாய்கள் கட்டாக்காலி நாயாகக் கருதப்பட்டு நஞ்சூட்டி அழிக்கப்படும் எனவும் நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப அலுவலகப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (8)

## மரண அறிவித்தல்கள்

### நீக்கிலாப்பிள்ளை மாசிலான் (ஞானராசா)

(ஓய்வுபெற்ற தபாலக ஊழியர்)



நாவாந்துறையைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை மாசிலான் (ஞானராசா) நேற்று (18.01.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நீக்கிலாப்பிள்ளை - இராசமாணிக்கம் தம்பதியரின் மகனும் யேசுதாசன் - திரேசம்மா தம்பதியரின் மருமகனும் நீற்றம்மாவின் அன்புக் கணவரும் செசீலியா, அன்ரனிதாஸ், செல்வதாஸ், தேவதாஸ், அமலதாஸ், ஜெனற்கில்டா, மெற்றில்டா, காலஞ்சென்ற ஜெனதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராசமலர், பீற்றர்(ஓய்வுபெற்ற க.தொ.தி.க.), ஞானதாஸ், ஞானதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மரியநாயகம் (சம்மாட்டி) பத்மராணி , தங்கராசா, ஜேசுதாசன் (சுவிஸ்), திலோசனா, மேரிகில்டா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(19.01.2006) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, நாவாந்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.80, கடற்கரை வீதி,
நாவாந்துறை.
(45798) (18-12-16)

தகவல்:
ம.மரியநாயகம் (மருமகன்)
(சம்மாட்டி).

### சுப்பிரமணியம் ஜெயரட்ணம்

(சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர், வடபிரதேச காரியாலயம், யாழ்ப்பாணம்)



நல்லூர், கொண்டலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜெயரட்ணம் அவர்கள் 17.01.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பாக்கியம் அவர்களின் அன்புப் புதல்வனும்காலஞ்சென்றவர்களான திருமதி நடராசா - செல்லம்மா அவர்களின் அன்பு மருமகனும் நேசமலர் அவர்களின் அன்புக் கணவரும் கனோஜியின் அன்புத் தந்தையும் வள்ளிநாயகி (கனடா), குணரத்தினம், விஜயநாயகி(கொழும்பு), காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், சாந்தநாயகி மற்றும் ஜீவநாயகி (கனடா) அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான முருகேசு, சந்திரமோகன் மற்றும் பாலசிங்கம், அமராவதி,சிவபாக்கியம், சரோஜினிதேவி, சிறிலிங்கம் (பிரதேச செயலகம் சங்கானை), மகாலிங்கம், இராசமலர், இராசலிங்கம், சந்திரலிங்கம் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), ரவிச்சந்திரன், சசீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின்அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.01.2006)வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39, கொண்டலடி லேன்,
நல்லூர்.
(45797) (18-12-16)

தகவல்:
நேசமலர் (மனைவி),
ஜெ.கனோஜி(மகள்).

## அமரர் அருட்கவி விநாசித்தம்பி ஐயாவின் பாதங்களுக்கு....



எங்கள் அருட்கவி, அமரர் விநாசித்தம்பி ஐயா அவர்களின் குடும்பத்தினரே! உறவினரே! ஊரவர்களே! அன்னாரின் மறைவால் துயருறும் உங்கள் அனைவருக்கும் கனடாவில் வதியும் அளவையூர் மக்கள் எல்லார் சார்பிலும் கனடா அளவெட்டி மக்கள் மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

எங்கள் அருட்கவி விநாசித்தம்பி ஆசிரியர் ஐயா என்றால் அளவெட்டி தான், அளவெட்டி என்றால் ஐயா விநாசித்தம்பி ஆசிரியர் தான் என்ற உயர்ந்த அடையாள நிலையில்தான் அவர் வாழ்ந்தார். இளமைக்காலத்தில் சிறந்த சைவ் ஆசார மாணவனாய், பண்ணோடு கலந்த தேவார இசைபாடும் கலைஞனாய், பின் நல்ல மாணவர்களை உருவாக்கும் சிறந்த ஆசானாய்த் திகழ்ந்தார்.

காலாகாலத்தில் மணவாழ்வு வாழ வேண்டிய மக்களைத் தன் சோதிடக்கலையால் வாழவைத்தவர்.அரிய தமிழ்ப் பக்திப் பாடல்களைத் தரும் அருட்கவியாய் சங்கீத கதா காலட்சேபம் செய்யும் பேரறிஞனாய்த் திகழ்ந்தார்.பிணங்கி நிற்கும் குடும்பங்களை தன் அன்புரைகளால் இணங்கி வாழ வைத்த நல்ல மனிதர்.

காரைநகரும் கற்கோவளமும் மறவன்புலவும் மாரீசன்கூடலும் என்று யாழ்.மண்ணின் அனைத்து ஊர்களிலும் தன் தொண்டை நீண்டு நிலைபெறச் செய்த வித்தகர்.மேலும் இலங்கையில் தமிழ் கூறும் இடங்களில் மட்டுமல்லாது தற்போது புலம்பெயர்ந்து உலக நாடுகளில் வாழும் நம்மவர்க்கும் ஐயாவின் தொண்டுபயன் பெறுவதைக் கண்டு பெருமை கொள்கிறோம். அவரின் சமயத் தொண்டு 'நாகவரதன்' ஆலயமாய் விளங்குவது பெரும் பாக்கியம்.அந்த உயரிய ஆத்மா நாகவரதன் திருத்தாள்களில் ஒளிவிடும் தீபச்சுடர் மூலம் என்றென்றும் காட்சிதரும் என்று பிரார்த்திப்போமாக.

(45800) (18-16-12)

நன்றிகள்
அளவெட்டி மக்கள் மன்றம் - கனடா

**மனோகரா** யாழ்ப்பாணம்
அதிரடி பொங்கல் வெளியீடு




இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி: ப.நே. 10.30, 1.30, 4.30, 7.30

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா
மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்:
9.00, 12.30, 3.30



**ராஜா** யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்

**நாகம்ஸ்** சுன்னாகம்



விஷால், மீராஜஸ்மின்
மற்றும் பலர் நடித்த
சண்டைக் கோழி
தினசரி: 10.30, 2.30, 5.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காணிப்புக் குழுவின் மீதான தாக்குதல்: 5 உறுப்பு நாடுகளும் கூட்டாகக் கண்டனம்

கொழும்பு,ஜன.19

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஐந்தும் மிக வன்மையாகக் கண்டித்துள்ளன.

டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே,சுவீடன் முதலான ஐந்து நாடுகளின் பிரதிநிதிகளே கண்காணிப்புக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகம், மட்டக்களப்பு லேக் றோட்டில் இலங்கை இராணுவ முகாமுடன் இயங்கும் ராசிக் துணை ஆயுதப் படை முகாமுக்கு ஐம்பது மீற்றர் தொலைவிலுள்ளது.அலுவலக முன்றிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்காணிப்புக்குழுவின் வாகனத்துக்கு கீழே வைக்கப்பட்ட குண்டே வெடித்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கண்காணிப்புக் குழுவுக்குச் சொந்தமான நாலு வாகனங்கள் பாரிய சேதத்துக்குள்ளாகின. அலுவலகம் இருக்கும் பகுதி அதி உயர் இராணுவப் பாதுகாப்புப் பிரதேசமாகும். இப்பகுதியிலேயே இதர துணை ஆயுதப்படை முகாம்களும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி), புளொட், ஈ.பி.டி.பியினரின் அலுவலகங்களும் உள்ளன.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அமுலை பாரபட்சமற்ற முறையில் நடுநிலை நின்று கண் காணிப்பதற்காக நிறுவப்பட்ட ஒரு சிவிலியன் அமைப்பாகும். இக்குழு பாதிக்கப்பட்ட பொதுமக்களின் நம்பிக்கைக்குரியதாகவும் செயற்பட்டு வந்திருக்கிறது. எனவே, கண்காணிப்புக் குழுவுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்புகளை அது செவ்வனே திறம்பட நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவிகளையும், ஒத்தாசைகளையும் யுத்த நிறுத்த உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் வழங்க முன்வரவேண்டும் என்று ஐந்து உறுப்பு நாடுகளும் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சு மூலமே இந்தக் கண்டன அறிக்கை வெளியிடப்பட்டிக்கிறது.

# தென்மராட்சியில் படையினர் தாக்கி நால்வர் படுகாயம்

யாழ்பாணம்,ஜன.19

புத்தூர் மேற்கில் படையினர் நேற்றுமுன்தினம் மாலை மேற்கொண்ட தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் என்று கூறப்படும் பொதுமக்கள் நால்வர் சிகிச்சைக்காக யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சரசாலையைச் சேர்ந்த பொன்னுத்துரை விக்கினேஸ்வரன் (வயது-36), மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சிவதாஸ் சிவகாந்தன் (வயது - 26), மந்துவில் மேற்கைச் சேர்ந்த கருணாநிதி நீரா (வயது-28) மற்றும் அதே இடத் தச் சேர்ந்த நாகராசா நாகரூபன் (வயது-20) ஆகிய நால்வருமே காயமடைந்தவர்களாவர்.

கெருடாவிலில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் குறித்து விசாரித்தே படையினர் தாக்கினர் என்று கூறப்படுகிறது.

(ஒ-6-15-117)

# உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அமளிதுமளிக்கு மத்தியில் இந்தச் சட்டமூலம் சபை முதல்வரும், அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வாவினால் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் இச்சட்டமூலம் விவாதமின்றி நிறைவேறுவதாக கூச்சல், குழப்பத்துக்கு மத்தியில் சபாநாயகர் அறிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து வடக்கு - கிழக்கிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது.

இந்தத் திருத்தச் சட்டத்திற்கமைய முன்னர் - கடந்த 2002 ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் ரத்துச் செய்யப்படவுள்ளன.

நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் பணம் தூய்தாக்கல் சட்டமூலம், நிதிக் கொடுக்கல் வாங்கல் சட்டமூலம் ஆகியவையும் விவாதமின்றி நிறைவேற்றப்பட்டன என அறிவிக்கப்பட்டது.

(ஒ-க)

# தமிழ் எம்.பிக்களின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே முடிந்தது.

இறுதியில் சபாநாயகர் கடுப்படைந்தார். "சபை ஒழுங்கைப் பேணி சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைப்புத் தாருங்கள். மறைந்த எம்.பி. ஜோசப் பரராஜசிங்கத்தின் பெயரையே நீங்கள் கெடுக்கிறீர்கள். உங்களின் செயற்பாட்டைப் பார்க்கும் போது எனக்கு வெட்கமாக இருக்கிறது" என் சீற்றத்துடன் குறிப்பிட்ட சபாநாயகர் நாடாளுமன்றத்தைத் தாம் ஒத்திவைக்கிறார் எனக்கூறிவிட்டு சபாபீடத்தை விட்டு எழுந்து போய்விட்டார்.

நாடாளுமன்றம் நேற்று 9.30 மணியளவில் கூடுவதற்கு முன்பே தமிழ் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தை தொடங்கிவிட்டனர்.

காலை 9 மணியளவில் சபாநாயகர் சபைக்கு வரும் வழியை மறைத்துத் தமிழ் எம்.பிக்கள் சபை நடுவில் தரையில் அமர்ந்து கரகோசங்களை எழுப்பியவாறு சத்தமிட்டு ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர்.

இதனால் சபாநாயகர் வழமையாக வரும் வழியை விட்டு வேறு வழியைப் பயன்படுத்தி - பின்புறத்தினால் - சபாபீடத்திற்கு வந்து சேர்ந்தார். வந்து சேர்ந்ததும் நாடாளுமன்றம் கூடுவது பற்றி அறிவித்தார்.

ஆனால், தமிழ் எம்.பிக்கள் சபாபீடத்திற்கு முன்பாக வந்து நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்திற்கும், கரகோசங்களுக்கும் மத்தியில் சபாநாயகர் சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முயற்சி செய்தார்.

ஆனால், தமிழ் எம்.பிக்கள் சபாபீடத்திற்குள் புகுந்து, சபாநாயகர் பேசுவதற்குப் பயன்படுத்தும் ஒலிவாங்கியைப் பிடித்துக் கொண்டு அதன் ஊடாகக் கரகோசங்களை எழுப்பினர். சபாபீடத்தின் மேல் வைக்கப்பட்டிருந்த செங்கோலைத் தூக்கிக்கொண்டு ஓடவும் முயற்சி செய்தனர்.

பெரிய களேபரத்துக்கு மத்தியில் எதுவும் செய்ய முடியாத நிலையில் சபாநாயகர் தமது ஆசனத்தை விட்டெழுந்து சற்றுப் பின்னே சென்றார்.படைக்கலச்சேவிதரும் செங்கோலை எடுத்துக் கொண்டு பின்னே சென்றார். அப்போது தமிழ் எம்.பிக்கள் சபாபீடத்தை விட்டுக் கீழிறங்கினார்.

ஒரு சில நிமிடங்கள் கழித்து மீண்டும் செங்கோல் கொண்டு வரப்பட்டு சபாபீடத்தில் வைக்கப்பட்டதோடு, சபாநாயகரும் சபாபீடத்தில் வந்து அமர்ந்தார். சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல அவர் முயற்சித்தார். அதுவரை சபாபீடத்தின் முன்பாக நின்று ஆர்ப்பாட்டம் செய்த தமிழ் எம்.பிக்கள் மீண்டும் சபாபீடத்திற்குள் நுழைந்தனர். முன்புபோல் செயற்பட்டனர்.

இந்த நிலையில் சபைக்குள் நுழைந்த பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா, சபாபீடத்திற்குள் நுழைந்த தமிழ் எம்.பிக்களை வெளியே தள்ளினார். அந்த இழுபறியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. பத்மினி சிதம்பரநாதன் கீழே இடறி விழுந்தார்.

எம்.பிக்கள் சிவநேசன், கஜேந்திரன் ஆகியோர் சபாபீட மேசையின் மேல் ஏற முற்பட்டதோடு, அந்த மேசையின் மேல் பலமாகத் தட்டிக் கொண்டே இருந்தனர்.

சிவாஜிலிங்கம் அங்கிருந்த காட்போர்ட் அட்டைகளைத் துண்டுதுண்டாகக் கிழித்து சபாபீடத்தை நோக்கி வீசினார்.

மேர்வின் சில்வாவுடன் சேர்ந்து இன்னும் சில அமைச்சர்கள் இவர்களை அமைதிப்படுத்த முயற்சி செய்தனர்.எல்லாம் பயனற்றுப்போயின.

"படையினரை வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேற்று", "அப்பாவித் தமிழர்களைக் கொல்லாதே","விசாரணைகளை உடனே ஆரம்பி" என்பவை உள்ளிட்ட பல கோசங்களை எழுப்பியவாறு தொடர்ந்தும் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இறுதிவரைக்கும் சபை நடவடிக்கைகளை நடத்த முடியாத நிலை நிலவியதால், சபையை 19ஆம் திகதி காலை 9.30 மணிவரை ஒத்திப்போடுமாறு அமைச்சர்கள் பெர்ணான்டோ புள்ளே மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் பிரேரித்தனர்.

இறுதியில் மிகவும் கடுப்பாகிப் போன சபாநாயகர் " உங்களின் செயற்பாட்டைப் பார்த்து நான் வெட்கப்படுகிறேன். மறைந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் பெயருக்கு நீங்கள் அபகீர்த்தியை ஏற்படுத்துகிறீர்கள். அவர் மிகவும் நேர்மையானவர், ஒழுங்கானவர்." எனக்கூறிவிட்டு மீண்டும் நாளை (அதாவது இன்று) 9.30 மணி வரை நாடாளுமன்றத்தை ஒத்திப்போடுகிறார் என அறிவித்தார்.

நாடாளுமன்றம் ஒத்திப்போடப்பட்ட பின்பும் ஆர்ப்பாட்டம் நிறுத்தப்படவில்லை. சுமார் 10 நிமிடங்கள் வரை தரையில் அமர்ந்து தமிழ் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம் பண்ணினர். அதன் பின்பு ஆர்ப்பாட்டத்தை நிறுத்திவிட்டுக் கலைந்து சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், மலையக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் பெ.சந்திரசேகரன், ராதா கிருஷ்ணன் எம்.பி, இ.தொ.கா சார்பில் முத்து சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் நேற்று நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருக்கவில்லை. (க)

# திருமலை மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட பாரிய காயங்களினால் இவர்கள் பலியானார்கள் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக நீதிவான் தெரிவித்துள்ளார்.

எனவே, பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

ஐந்து மாணவர்களும் படையினரைத் தாக்கும் நோக்கத்துடன் தம்முடன் வைத்திருந்து கையாண்ட கிரனேட் வெடித்ததிலேயே அவர்கள் உயிரிழந்தனர் என்று பாதுகாப்புப் படைத் தரப்பில் முதலில் கூறப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (க)

# கடற்படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பிரமணியம் யோகேஸ்வரன் (வயது 36), அப்புத்துரை கிருபாகரன் (வயது 39), மகாலிங்கம் சிங்கராசா (வயது 26) ஆகியோரே இச்சம்பவத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பில் நாளாந்தம் கடற்றொழிலை மேற்கொள்ளும் இவர்கள் நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் மூன்று படகுகளில் வழமைபோன்று கடற்றொழிலுக்குச் சென்றனர். கடலில் வலைகளை விரித்து முடித்த போது - நேற்று அதிகாலை ஒரு மணியளவில் - அப்பகுதிக்கு விசைப்படகில் வந்த கடற்படையினர் கடற்றொழிலாளர்கள் ஆறு பேரையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதில் வேலுப்பிள்ளை இராசரத்தினம், சோமு உலகேஸ்வரமூர்த்தி ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். மற்றைய நால்வருக்கும் அடிகாயங்கள் ஏற்பட்டன.

இதனையடுத்து அவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் படகுகளைச் செலுத்தி கரையை அடைந்தனர். அவர்களை உறவினர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். இச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறை[illegible]

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், தமிழர் தாயகத்தில் இராணுவத்தினரும், ஏனைய அரச படையினரும் புரியும் அடாவடித்தனங்கள், அட்டகாசங்களை வரிசைப்படுத்தி ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தனர்.

படையினரின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையினால் இரவு ஆறு மணிக்குப் பின்னர் யாழ். குடாநாட்டில் மக்கள் வீதிக்கு இறங்குவதில்லை. ஆக, இராணுவ வாகனங்களும் சிப்பாய்களின் நடமாட்டமுமே வீதியில் உள்ளன. அவற்றுக்கு மத்தியில் கொலைகாரர்கள் அநாயசமாகத் தம் கைவரிசையைக் காட்டுகிறார்கள். படையினர் மாத்திரம் வீதியில் நடமாடும் சமயத்தில் கொலை, கொள்ளை, திருட்டுகள் நடத்துவோர் தமது ஆயுதங்களுடன் இலகுவாகத் தப்பிச் செல்கின்றார்கள். என்றால் இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பினர்.

மன்னாரில் ஒரு குடும்பத்தைக் கொலை செய்து படையினர் எரித்ததால் அந்தக் கிராமத்துக்கே திரும்பிப் போக அந்த மக்கள் அஞ்சுகின்றனர். உங்கள் படைகளின் செயல்களால் மன்னார் மக்கள் அஞ்சி, மீண்டும் தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகத் தொடங்கிவிட்டனர். உங்கள் கடற்படையினரின் தொல்லையால் குடாநாட்டு மீனவர்கள் தமது படகுகள் சகிதம் முல்லைத்தீவுக்கு இடம்பெயர்கின்றனர்.

நேற்று காரைநகரில் அப்பாவி மீனவர்களின் கால், கைகள் எப்படி கடற்படையினரால் அடித்து முறிக்கப்பட்டுள்ளன என்பதை யாழ். வைத்தியசாலை டாக்டர்களுடன் தொடர்பு கொண்டு கேளுங்கள். - என்று ஜனாதிபதியிடம் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

படையினரின் அத்துமீறிய அட்டகாசங்களைத் தடுத்து நிறுத்தாவிட்டால் இந்த மண்ணில் அமைதி சாத்தியமேயில்லை என்று குறிப்பிட்ட கூட்டமைப்பினர், இந்த மோச நிலையை சர்வதேச சமூகத்துக்கும் உங்கள் கவனத்துக்கும் கொண்டுவருவதற்காகவே நாடாளுமன்றை இயங்கவிடாமல் நாம் ஸ்தம்பிக்கச் செய்யும் போராட்டத்தை ஆரம்பித்தோம். அது பற்றிய முடிவை எமது நாடாளுமன்றக் குழுவே எடுத்தது. எனவே, அதைக் கைவிடுவதானாலும் அதே நாடாளுமன்றக் குழுவே முடிவெடுக்கவேண்டும். ஆகையால் நாம் இப்போது தங்களுக்கு உறுதியான பதில் ஏதும் தரமுடியாது. ஆனால், எமது இந்த முறைப்பாட்டை உரிய முறையில் கவனத்தில் கொண்டு அரச படைகளைக் கட்டுப்படுத்துங்கள். அதை நீங்கள் செயலில் காட்டுவீர்களேயானால் நாடாளுமன்றத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் எமது போராட்டத்தைக் கைவிடுவது குறித்து நாம் சாதகமாகப் பரிசீலிக்கலாம். - என்றும் கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் உறுதியாகத் தெரிவித்தனர் எனத் தெரியவந்தது.

யாழ். குடாநாட்டிலும் ஏனைய இடங்களிலும் மக்கள் இருக்கும் குடியிருப்புப் பிரதேசங்கள் எல்லாம் நீங்கள் படைகளைப் பரப்பியுள்ளீர்கள். இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேவர அஞ்சுகின்றனர். முதலில் அவர்களை முகாமுக்குள் கொண்டுசெல்ல உத்தரவிடுங்கள் என்றும்- கூட்டமைப்பினர் கேட்டனர். அதற்கு - படையினரை முகாம்களுக்குள் கொண்டு சென்றால் கிரனேட் தாக்குதல்கள் குறையுமா என்ற பதில் கேள்வி ஒன்றை ஜனாதிபதி எழுப்பினாராம்.

படையினரைப் பரப்பி வைத்திருந்தால் மட்டும் கிரனேட் தாக்குதல் குறைந்துவிடுமா என்று அதற்குப் பதிலடியாகக் கேள்வி கேட்டனர் தமிழ்க் கூட்டமைப்பினர்.

"அப்படித்தான் இராணுவம் நினைக்கின்றது." - என அதற்குப் பதிலளித்தாராம் ஜனாதிபதி.

மக்களோடு பழகத் தெரியாத - பேசத் தெரியாத - நல்லுறவைப் பேண முடியாத - இராணுவத்தின் மூலம் தமிழ் மக்களின் மனதை அரசினால் வெல்ல முடியாது என்பதை ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டிய கூட்டமைப்பினர், நாடாளுமன்றம் இயங்க அனுமதிக்கும்படி அவர் விடுத்த கோரிக்கை குறித்துத் தாங்கள் கூடி ஆராய்வார்கள் என்று பதிலளித்து விட்டு அலரிமாளிகையிலிருந்து புறப்பட்டனர்.

ஜனாதிபதியின் கோரிக்கை குறித்து ஆராய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு இன்று காலை கூடுகின்றது. ஆனால், அது நாடாளுமன்றுக்குள் தற்போது ஆரம்பித்திருக்கும் போராட்டத்தைக் கைவிடுவதற்கு வாய்ப்புகள் - சாத்தியங்கள் - பெரும் பாலும் குறைவு என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (க)

# சர்வகட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புடைய வட்டாரங்கள் முன்னர் தெரிவித்திருந்தன.

ஆனாலும், இந்தக் கூட்டத்திற்கான அழைப்பு நேற்றுமாலைவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சி களுக்கு கிடைக்கவில்லை. உத்தியோகபூர்வ அழைப்புக் கடிதங்கள் கிடைக்காத பட்சத்தில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளப்போவதில்லையென மேற்படி கட்சிகளின் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (க)

# நோர்வேயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கம் தெரிவிக்கும் தகவலை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் புலிகளுக்கு அனுப்பியிருந்தார் என அமைச்சரவை வட்டாரங்களை மேற்கோள் காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் சமரச பேச்சுவார்த்தை ஐரோப்பிய நாடு ஒன்றில் அல்லது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க நோர்வே நாட்டில் நடத்த அவர் விருப்பம் கொண்டுள்ளார். அதனை நோர்வே தூதுவர் ஊடாக புலிகளுக்கு தெரிவித்துள்ளார் என அமைச்சரவை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

-இப்படி அந்த இணையத்தளச்செய்தி மேலும் தெரிவித்தது.

இவ்விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த தீர்க்கமான ஒரு முடிவை எடுத்துவிட்டாலும், அதனைத் தென்னிலங்கையின் ஒருமித்த கருத்தாக - ஏக இணக்கப்பாடாக - வெளிப்படுத்தச் செய்வதன் மூலம் தமது நிலைப்பாட்டுக்குப் பலம் சேர்க்க அவர் விரும்புகிறார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்களில்இருந்து தெரியவருகின்றது. இதற்கு இன்று மாலை கொழும்பில் நடைபெறும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை வாய்ப்பாகப் பயன்படுத்த அவர் முனைவார் என்றும் கூறப்படுகின்றது. (க)

## மரண அறிவித்தல்

### சின்னமணி துஸ்யந்தி

(மாணவி, தரம் 11,
யாழ். சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

அராலி றோட், சங்கானையைச் சேர்ந்த சின்னமணி துஷ்யந்தி அவர்கள் நேற்று (18.01.2006) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி றோட்,*
*சங்கானை.*

தகவல்:
சின்னமணி (தந்தை).

(சி-47421)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவ[illegible] வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org